பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 04 திங்கட்கிழமை 17.01.2022 கதிர் 73

### இனி இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியக் கூட்டமைப் புடன் – சம்பந்தர் தலைமையி லான அணியுடன் – ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் நேரடிப் பேச்சு நடத்தத் தயாரா கின்றார் என்ற செய்தியை கடந்த இரண்டு, மூன்று நாள்களாக என் பத்தியில் கோடி

பக்கம்02

# இன, மத, குலவாதிகளின் வாய்களை எனது ஆட்சியில் அடக்கியே தீருவேன்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபதம்

கொழும்பு, ஜனவரி 17

எனது ஆட்சியில் இன, மத, குல மற்றும் அடிப்படைவாதம் போன்ற பேதங்கள் இன்றி அனைவருக்கும் பொதுவானதொரு ஆட்சி நடக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

12



## வல்லவர்கள் ஆளக்கூடிய ஆட்சி விரைவில் மலரும்!

### மனோ எம்.பி. உறுதி



இனி நல்லாட்சி அல்ல, விரைவில் வல்லாட்சி அதாவது வல்லவர்கள் ஆளக்கூடிய ஆட்சி உரு வாகும்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பொங்கல் விழா தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கைக்கான இந்தியத் தூதுவரின் பங்குபற்ற லுடன் நேற்று நுவரெலியாவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகை யிலேயே கூட்டணியின் தலைவர்

12

## யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் முதன்முறையாக முத்தமிழ் விழா

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஏற் பாட்டில் முதன்முறையாக முத்தமிழ் விழா நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழ் கலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கும் வகை யில் மேள தாள வாத்தியங்கள்

12



## நாட்டில் சட்டவிரோதமான முறையில் சொகுசு வாகனங்கள் பயன்படுத்தல்

### 140 இற்கும் மேற்பட்ட அரச உயர் அதிகாரிகள் சிக்கினர்

அமைச்சுக்களின் செயலாளர்கள், கூட் டுத்தாபனங்களின் தலைவர்கள் உட் பட 140 இற்கும் மேற்பட்ட அரச உயர் அதி காரிகள் இரண்டு அல்லது மூன்று சொகுசு வாகனங்களைச் சட்டவிரோதமான முறை யில் பயன்படுத்துகின்றனர் என்று தெரி விக்கப்படுகிறது.

இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் அரச உயர் அதிகாரிகளின் இந்தச் செயற் பாடு தொடர்பில் விசேட அறிக்கை ஒன் றைச் சமர்ப்பித்துள்ளனர்.

இவ்வாறு அரச

12

## அம்பாறையில் கோர விபத்து; மூவர் சாவு! ஐவர் படுகாயம்!!

அம்பாறை, தமண பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் மூவர் பலியாகியுள்ளனர். ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

கார் ஒன்றும் லொறி ஒன்றும் மோதுண்டதா லேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## இலங்கை மக்களை இந்தியா ஒருபோதும் மறக்க மாட்டாது!

### தூதுவர் கோபால் பக்லே தெரிவிப்பு

இலங்கை மக்களை இந்தியா ஒருபோதும் மறக்காது என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லே தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான தைப்பொங்கல் விழா, மலையகப் பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகளுடன், தொழிலாளர் தேசிய சங்கத் தின் ஏற்பாட்டில் நேற்று நுவரெலியா சினிசிட்டா மைதானத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு

12





## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டி வந்தேன்.

சம்பந்தப்பட்ட சில வட்டாரங்களே என்னுடன் தொடர்பு கொண்டு, "அப்படியா? அது உண்மையா?" – என்று விசாரித்தன.

"ஆம். அது உண்மை. அவர் தயாராகின்றார். அதற்கு இந்தியப் பின்னணி – ஆசீர்வாதம் – இணக்கம் – உண்டு எனவும் தெரிகின்றது." – என்றேன்.

நான் நேரத்துடன் கோடி காட்டிய அந்த – அதே – விடயத்தை, ஞாயிறு ஆங்கில வார இதழ் ஒன்று நேற்று வெளியிட, அது இப்போது பரபரப்பாகப் பேசப்படுகின்றது. ஆனால் எனது வாசகர்களுக்கு அது பழைய செய்திதான்.

தாம் இடைநிறுத்திய நாடாளுமன்றத்தின் புதிய தொடரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கின்றார். அங்கு தமது அரசின் கொள்கை விளக்க உரை ஒன்றை ஆற்றுவார்.

இன நல்லிணக்கத்தை ஆரம்பிப்பதற்கான தமது புதிய முயற்சி குறித்து அந்த உரையில் அவர் கோடி காட்டுவார் எனக் கூறப்படுகின்றது.

அது மாத்திரமல்ல, இதன் மூலம் தமது நிர்வாகத்தில் முடங்கிக் கிடக்கும் பொருளாதார நிலைமையைத் தூக்கி நிறுத்தவும் அவர் ஒரு தந்திரோபாயம் வகுக்கின்றார். அந்தத் தந்திரோபாயம் – உத்தி – அப்படி ஒன்றும் புதியதல்ல. பழையது தான்.

அமைதிப் பேச்சு இல்லை, ஒரே வழி யுத்தம்தான் என்று பிடிவாதமாக நின்ற விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், ரணில் அரசுடன் சமரசம் பேணி, ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வு காண இணங்குகின்றார் என 2002 இறுதியில் அறிவித்த போது உலகம் மலைத்துத்தான் போய்விட்டது.

இந்த இணக்க நிலையை உஷார்ப் படுத்தி, உறுதிப்படுத்தி, வலுப்படுத்துவதற்காக – இந்த இணக்கமும், சமாதான நிலையும் நீடித்தால் அதன் கீழ் மீள்கட்டமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு 45 ஆயிரம் கோடி ரூபாவை (இருபதாண்டுகளுக்கு முன்னர் இத்தொகையின் மதிப்பு உச்சம்) தருவதாக சர்வதேச நாடுகள் உடனடியாக அறிவித்தன.

அது போல ஒன்று இப்போது நிகழும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்பார்க்கின்றாராம்.

பௌத்த, சிங்கள மக்களின் ஜனாதிபதி தாம் என்று கோடி காட்டி, தமிழர்களுடன் நல்லிணக்கப் பேச்சுக்கு இடமேயில்லை என்று வெளிப்படுத்தி வந்த நிலையில், இப்போது நல்லிணத்துக்காக இந்தியத் தரப்பின் ஆசியுடன் தமிழர்களோடு பேசப் போகிறேன் என்று அறிவித்ததும், அதை ஊக்குவிப்பதற்காக, உலக நாடுகளின் நிதி உதவி வந்து கொட்டும் என்றும், ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் மேற்குலகின் அழுத்தம் இலங்கைக்குக் குறையும் என்றும் கோட்டாபய நம்புகின்றாராம்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா, இலங்கை, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்ப் போராளிகள் குழுக்கள் இடையே அதிரடியான இராஜதந்திர நிகழ்வுகள் 1987 இல் வேகமாகக் கட்டவிழ்ந்தன. அதிர்ச்சி தரும் அதிரடித் திருப்பங்கள் நிறைந்த அந்தக் காலகட்டம் மீண்டும் சூழ்ந்து வருவதாக எனக்குத் தோன்றுகின்றது என சில வாரங்களுக்கு முன் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அந்த நிலைமைதான் இப்போது, மீள வந்திருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது. அதனால் அரசியல், இராஜதந்திர நிகழ்வுகள், அதிரடித் திருப்பங்களை இனி நாம் அடிக்கடி சந்திக்கக் கூடியதாக இருக்கும்.

★ ★ ★

ஓர் எதேச்சாதிகார ஆட்சிப் பீடத்தை எதிர்த்து நின்று வீழ்த்துவதற்கு மக்கள் கவர்ச்சியுள்ள ஒரு தலைவர் கட்டாயம்.

பதினேழு வருடங்களாக ஜே.ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாஸா போன்றோரால் நிலைநிறுத்தப்பட்ட ஐ.தே.கட்சியின் ஆட்சியை வீழ்த்த 90களின் ஆரம்பத்தில் புதிய தாரகையாகத் திடீரென எழுச்சியோடு சந்திரிகா வந்தார்.

2010 இல் சரத் பொன்சேகாவால் அது முடியவில்லை.

எனினும், 2015 இல் மைத்திரிபால சிறிசேனவினால் அது முடிந்தது.

2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவிடம் 14 லட்சம் வாக்குகளினால் தோற்ற சஜித் பிரேமதாஸா மீண்டும் ராஜபக்ஷக்களை வீழ்த்தும் வலிமையான வேட்பாளராக தென்னிலங்கையில் நோக்கப்படவில்லை.

இந்தப் பின்புலத்தில் மக்கள் கவர்ச்சியும், செல்வாக்கும் மிக்க ஒரு புதிய முகம் – 'கரிஸ்மா' மிக்க தலைமைத்துவம் – பொது வேட்பாளராக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினால்தான் ராஜபக்ஷக்களை வீழ்த்த முடியும் எனக் கருதப்படுகின்றது.

இந்தப் பொது வேட்பாளர் தகுதிக்கு கரு ஜயசூரிய, சம்பிக்க ரணவக்க என்று பலரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டு பொது அபிப்பிராயத்தில் நிராகரிக்கப்பட்ட நிலையில் புதிய பெயர் ஒன்று தென்னிலங்கையில் அடிபடுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவின் பின்புல ஆதரவோடு அந்தப் பிரமுகர் முன்நகர்த்தப்படுகின்றார்.

அவர்தான் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா.

மஹிந்த ராஜபக்ஷவின் எதேச்சாதிகார ஆட்சிக்குப் பயந்து, நீதித்துறையை அடகுவைக்காமல், துணிந்து தீர்ப்புகளை வழங்கியவர். பலவந்தமாகப் பதவியில் இருந்து துரத்தப்பட்ட போதும், தானே பிரதம நீதியரசர் என்று நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தவர். நல்லாட்சி அரசில் அவரது பிரதம நீதியரசர் பதவி மீண்டும் உறுதி செய்யப்பட்ட போதும் – அதில் நீடிக்கக் கூடிய உரித்து இருந்தும் – அந்தப் பதவியில் அரசியல் செய்ய விரும்பாமல் – அடையாளத்துக்காக ஒரு நாள் மட்டும் பதவியில் இருந்து விட்டுத் தாமாக விலகிச் சென்ற பண்பாளர். கவர்ச்சிகரமான – வசீகரமான – முகத் தோற்றம் கொண்டவர்.

பொது வேட்பாளராவதற்கான புதிய தாரகையாக அவர் எழுச்சி பெறுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

ராஜபக்ஷக்கள், நீதித்துறையை தமது ஆட்சியதிகாரத்தால் அடக்க முயன்றபோது அதற்கு இடங்கொடாமல், துணிந்து அஞ்சாமல் நின்ற இரும்புச் சீமாட்டி என்ற பெயர் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு ஏற்கனவே உண்டு. ஆகவே ராஜபக்ஷக்களைத் துணிந்து எதிர்கொண்டு நிமிரும் தகுதி கொண்டவர் அவரே என்ற கருத்து நிலைப்பாடு ஏற்கனவே தென்னிலங்கை மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்த பின்னரும், நீதிமன்றங்களில் சட்டத்தரணியாகப் பணிபுரியாத இளம் ஷிராணி பண்டாரநாயக்கவை உயர்நீதிமன்ற நீதியரசராக சந்திரிகா நியமித்த போது அரசியல் மற்றும் சட்ட ரீதியாகப் பல எதிர்ப்புகளை ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க எதிர்கொள்ள வேண்டியவராக இருந்தார். ஆனால் சந்திரிகாவின் அந்தத் துணிச்சலான நியமனம் சரியானதே என்பதை நீதித்துறை சார்ந்த தமது தைரியமான நடவடிக்கைகள், செயற்பாடுகள் மற்றும் தீர்ப்புகள் மூலம் ஷிராணி பண்டாரநாயக்கா நிரூபித்தார்.

இப்போது பொதுவேட்பாளராக ஷிராணி பண்டாரநாயக்காவை முன்நகர்த்தும் முயற்சியில் சந்திரிகாவும், கணிசமான பங்களிக்கின்றார் என்று தெரிகின்றது.

ஒரு பண்டாரநாயக்காவை (ஷிராணியை) முன்னிறுத்தும் இன்னொரு பண்டாரநாயக்காவின் (சந்திரிகா குமார துங்கவின்) முயற்சி வெற்றியளிக்குமா? இனிக் கட்டவிழும் நாட்டின் தேசிய அரசியலின் போக்குத்தான் அதனை முடிவு செய்யும்.


– மின்னல் –

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622












# பொருளாதாரத் தடை தமிழர்களுக்குப் புதிதல்ல தற்போதுதான் சிங்களவர்கள் உணர்கிறார்கள்!



## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு





பொருளாதார தடை என்பது தமிழர்களுக்குப் புதிதான ஒரு விடயம் இல்லை. அந்தப் பொருளாதாரத் தடையைத் தற்போது தான் சிங்களவர்கள் உணர்கிறார்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் நிகழ்வும் பாரம்பரிய தமிழர் விளையாட்டு நிகழ்வும் உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன.

நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலையே சிறிதரன் எம்.பி.மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு –

தமிழர்களின் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் நாங்கள் தான் பேணி வளர்க்க வேண்டும், நாங்கள் தான் அவற்றைக் கட்டிக்காக்க வேண்டும், நாங்கள் அதற்கான முதுகெலும்பாகச் செயற்பட வேண்டும் என்கின்ற அடிப்படையில் தான் இன்றைய நாள் ஒரு பண்பாட்டு நாளாக உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம் முன்னெடுத்திருக்கிறது.

மிக முக்கியமாகத் தமிழர்களிடமிருந்து அருகிப் போகின்ற போர்த்தேங்காய் உடைத்தல், தலையணைச் சமர், முட்டி உடைத்தல், கிளித்தட்டு போன்ற எங்களுடைய பண்பாட்டோடும், பாரம்பரியத்தோடும் தமிழரோடு பிறந்து வளர்ந்த அவர்களுடைய கலாசாரத்தோடு இயல்புடன் கூடிய இந்த நிகழ்வுகள் எங்களை விட்டு விலகிச் செல்கின்றன.

அவ்வாறு விலகிச் செல்கின்ற இந்த விளையாட்டுக்களை மீண்டும் நினைவூட்டுகின்ற வகையில் பண்பாட்டு விழாவாகத் தமிழர்களுடைய திருநாளான தைப்பொங்கலை மையமாக வைத்து நீங்கள் முன்னெடுத்திருக்கின்றமை மிகவும் மகிழ்ச்சியானது.

இங்கே வருகின்றபோது பார்த்தேன். நெற்கதிர்கள் பூத்துக்குலுங்க இந்த மண்டபம் மேடையை அலங்கரித்து இருக்கிறீர்கள். எங்கள் மக்களுடைய வரலாற்றிலே நாம் நெல்லோடும் இந்த நெல்லின் வாழ்வோடும் வாழ்ந்தவர்கள்.

இம்முறை விவசாயிகளுக்கான பசளைகள் தடை செய்யப்பட்ட காரணத்தால் விவசாயிகளின் அறுவடை என்பது மிகப் பாரிய அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஓர் ஏக்கரில் 8 அல்லது ஒன்பது பை நெல்லுத்தான் அறுவடை செய்கின்ற அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. ஆனால், அரசாங்கம் இப்போது மியன்மாரில் இருந்தும், வேறு நாடுகளில் இருந்தும் எத்தனையோ லட்சம் மெட்ரிக் தொன் அரிசியைக் கொள்வனவு செய்யத் தயாராக இருக்கிறது.

இவ்வாறு அங்கு இரசாயன முறையில் தயாரிக்கப்பட்ட அரிசிகளை இங்கு இறக்குமதி செய்ய முனைகிறார்கள். இங்கு விவசாயம்செய்பவர்களுக்கு உரத்தைப் பயன்படுத்த அரசு தடை விதித்திருக்கிறது.

அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கிலே அறுவடை செய்கின்ற காலத்தில் இலங்கையில் ஏனைய பகுதிகளில் சிலவற்றில் இனித்தான் விதைப்பு ஆரம்பமாக இருக்கின்றது.

வடக்கு கிழக்கில் விவசாயிகள் நெல் அறுவடை செய்கின்ற காலத்தில் இந்த அரசாங்கம் வெளி நாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வது மேலும் எமது மக்களைத் துன்பத்துக்கு உள்ளாகும்.

ஆனால், நாம் கடும் நெருக்கடியோடு வாழ்ந்தவர்கள். ஒரு கால கட்டத்தில் 90 களில் இலங்கையில் மண்ணெண்ணெய் 12 ரூபாக்கு விற்ற போது நாம் 300 ரூபாய்க்கு வாங்கியவர்கள்.

அப்போது யூரியாவை கண்ணால் காணவில்லை, உடுப்பு துவைப்பதற்கு சவர்க்காரங்களைக் காணவில்லை, நாங்கள் இந்த மண்ணிலே பெற்றோலைக் கண்டிருந்ததில்லை, சீமெந்துகளை, கம்பிகளைக் கண்டிருந்ததில்லை. அவ்வாறு இருந்தும் இந்த மண்ணிலே நாங்கள் வாழ்ந்து இருந்தோம்.

எங்களுடைய வாழ்க்கை நகர்ந்திருந்தது. அதனை இப்போது தான் சிங்கள மக்கள் படிக்கவும் உணரவும் ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே, பொருளாதாரத் தடை என்பதும் பொருளாதாரத்தின் மீதான ஒரு வகையான ஆக்கிரமிப்பு என்பதும் இப்போதுதான் சிங்கள மக்களை உணர வைத்திருக்கிறது .

தமிழர்கள் ஏற்கனவே இவற்றை நேரடியாக அனுபவித்து வாழ்ந்தவர்கள் என்றும் தெரிவித்தார்.

# களு கங்கையில் நீராட சென்ற இருவரும் சடலங்களாக மீட்பு!

## சிறுவன் மாயம்



சிறிபாகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஸ்ரீ பாலபந்தல பகுதியில் களு கங்கையில் நீராடிக் கொண்டிருந்த நால்வர் நீரில் மூழ்கியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் ஒருவர் உயிருடன் காப்பற்றப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் நீரில் மூழ்கிய இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளமையுடன் 10 வயது சிறுவன் ஒருவன் காணாமல் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அங்குராவதொட்ட பகுதியை சேர்ந்த 22 மற்றும் 40 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காணாமல்போன சிறுவனைத் தேடும் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் சிறிபாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில் கொழும்பில் மாபெரும் பொங்கல்!

## பாரம்பரிய கலைநிகழ்வுகளும் நடந்தன

லயன்ஸ் 306 பி1 மாவட்டத்தின் ஏற்பாட்டில் கொழும்பு பம்பலப்பிட்டி இந்து கல்லூரியில் பொங்கல் விழா பாரம்பரிய நடனங்களுடன் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த விழாவிற்கு 306 பி1 இன் மாவட்ட ஆளுநர் லயன் ஆர்.எல். ராஜ்குமார் மற்றும் அவரது பாரியார் லயன் மேரியன் தலைமை தாங்கினர்.

அத்துடன், மாவட்டத்தின் முதலாம், இரண்டாம் துணை ஆளுநர்கள், முன்னாள் ஆளுநர்கள் உட்பட லயன்ஸ் கழக உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றனர்.

இதன்போது பல்வேறு பாடசாலை மாணவ, மாணவிகள் ஒன்றிணைந்து தைப்பொங்கல் விழாவை மெருகூட்டும் வகையில் சமய மற்றும் கலாசார நடனங்களை நடத்தி பார்வையாளர்களை வியக்கச்செய்திருந்தனர்.

'இன, மத, மொழி பேதமின்றி ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதைப்போன்று நம் எல்லோரும் தேவையறிந்து, துன்பத்தில் வாழும் ஏழை மக்களுக்காகப் பாடுபடவேண்டும் என்றும் மாவட்ட ஆளுநர் தனது உரையில் தெரிவித்தார்.



இந்த நிகழ்வில் கொமர்சல்வங்கின் நிறைவேற்று அதிகாரியும் நிர்வாக இயக்குநருமாகிய லயன் எஸ்.ரெங்கநாதன் தம்பதிகளும் கலந்துகொண்டனர்.

# தர்மபுரப் பொலிஸ் பொறுப்பதிகாரியாக டி.எம்.ஏ சதுரங்க நியமனம் பெற்றார்



கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக மீண்டும் தனது கடமைகளை டி.எம்.ஏ. சதுரங்க பொறுப்பேற்றுள்ளார்.

இவர் தனது கடமைகளை கடந்த சனிக்கிழமை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுள்ளார். இதன்போது சமய வழிபாடுகளை நிறைவு செய்து உத்தியோகபூர்வமாக தனது கட மைகளை மீண்டும் பொறுப்பேற்றுள்ளார்.

# கனடா இலங்கைக்குப் பயண எச்சரிக்கை; ராஜதந்திரத்தை கையாள தயாராகும் அரசு

கனேடிய அரசாங்கத்தால் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள பயண எச்சரிகைக்கு அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார நிலைமை மோசமடைந்து செல்வதாகவும், உணவு, மருந்துப் பொருள்களுக்கு பற்றாக்குறை ஏற்படும் எனவும் கனடா தமது நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தியிருந்தது.

எனினும் இந்தப் பயண எச்சரிக்கை நியாயமற்றது என இலங்கை வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கனேடிய அரசாங்கத்தின் பயண எச்சரிக்கை தொடர்பாக இராஜதந்திர அடிப்படையில் பேச உள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஓய்வுநிலை அட்மிரால் ஜயனாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகரிடம் இந்த விடயம் பற்றி பேச உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதார ஸ்திரமற்ற நிலை நிலவி வருவதாகவும் உணவு, எரிபொருள் மற்றும் மருந்துப் பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்ளுமாறும் கனடா, தனது நாட்டு பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீண்டும் எகத்தாளம்

மஹிந்த ராஜபக்ஷ எதேச்சாதிகார ஜனாதிபதியாக இருந்த 2006 – 2015 காலப்பகுதியில் ஆட்சித் தலைமைத் தரப்புகளினால் ஒரு விடயம் கூறப்படுவதுண்டு. தங்களுடைய ஆட்சிக் கூட்டுத் தலைமை மிக வலிமையானது என்ற அரசியல் திமிரில் வெளிவந்த கருத்து அது.

“எங்கள் ஆட்சிக் கூட்டமைப்பின் கதவு – வாசல் – சலூனின் கதவைப் போன்றது. யாரும் வரலாம், யாரும் போகலாம்” – என்று அவர்கள் அடிக்கடி கூறுவர்.

சலூன் கதவு இரண்டு பக்கமும் திறக்கக் கூடியது. உள்ளே இருப்பவர்கள் வெளியே தள்ளித் திறந்து கொண்டு வெளியேறலாம். அது போல வெளியே நிற்பவர்கள் உள்ளே தள்ளித் திறந்து கொண்டு நுழையலாம்.

அதாவது, ஆட்சிக் கூட்டமைப்புக்குள் இருப்பவர்கள் யாரும் விரும்பிய நேரத்தில் வெளியேறலாம். அது போலவே வெளியில் நிற்கும் எவரும் அரசுக் கூட்டமைப்புக்குள் வந்து இணையலாம்.

எவருக்கும் வெளியே செல்ல மறிப்பும் கிடையாது. யாரும் உள்ளே நுழைய விசேட அழைப்பும் கிடையாது என்ற திமிர்த்தனப் பிரகடனம் இது.

அரசுக் கூட்டமைப்பில் இருந்து விரும்பும் யாரும் வெளியேறலாம். விரும்பினால் இருங்கள். இல்லாவிட்டால் போங்கள். யாரும் இங்கு இருங்கள் என்று உங்களைத் தடுக்கவோ, வலியுறுத்தவோ மாட்டார்கள் என்பதுதான் அதன் வெளிப்படையான கருத்து.

அதாவது அரசுக்குள் இருப்பதானால் கட்டுப் பெட்டியாக, அடங்கி இருங்கள், பிடிக்காவிட்டால் – அடங்கி இருக்க முடியாவிட்டால் – வெளியேறுங்கள், ஒரு கவலையும் இல்லை என்பதுதான் அப்போது மஹிந்த ஆட்சிப் பீடம் அரசியல் எகத்தாளத்துடன் திரும்பத் திரும்ப வெளியிட்ட செய்தி.

அந்த எகத்தாளத்தின் – அரசியல் திமிரின் – விளைவை 2015 ஜனவரி இரண்டாம் வாரம் முதல் நேரில் அனுபவிக்க வேண்டியவர்களானார்கள் ராஜபக்ஷக்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனவில் தொடங்கி, அவரது அரசுக் கூட்டணியில் இருந்த முஸ்லிம் தரப்புகள் வரை எல்லாலோரும் வெளியேறி, அவரை அரசியல் அதிகாரத்தில் இருந்து வீழ்த்தியது இந்த சலூன் கதவுப் பாதை ஊடாகத்தான் என்பதை அவர் புரிந்து கொள்ளத் தயாரான போது காலம் கடந்திருந்தது.

அதிர்ஷ்டவசமாக அப்படி வெளியேறியோர், பின்னர் தாம் கூட்டுச் சேர்ந்த தரப்புகளுடன் முரண்பட்டு பிரிந்து – பிளந்து – நின்றமையால் ராஜபக்ஷக்களுக்கு மீண்டும் அதிகார வாழ்க்கை – ஆட்சி நிர்வாகம் – கிட்டியது.

எனினும், மீண்டும் அந்த 2015இற்கு முந்திய எகத்தாளப் பேச்சுகளை ராஜபக்ஷக்கள் பேசத் தொடங்கி விட்டனர்.

“அரசை விட்டு வெளியேறுவோர் வெளியேறலாம்” – என்ற திமிர்ப் பேச்சை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ என்று அனைத்து ராஜபக்ஷக்களும் அவர்களது எடுபிடிகளும் கூறத் தொடங்கி விட்டனர்.

அரசியல் அதிகாரம் எல்லை மீறும் போது இத்தகைய அரசியல் செருக்குத்தனப் போக்கு வருவது வழமைதான். அதுவும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையும், இருபதாவது அரசமைப்புத் திருத்தம் மூலம் வரையறையற்ற நிறைவேற்று அதிகாரமும் கிட்டியிருக்கும் போது இந்த மமதை வருவது தவிர்க்க முடியாதது. ஆனால் 2015 நிலைமையை ராஜபக்ஷக்கள் மீண்டும் ஒரு தடவை நினைவுபடுத்திப் பார்ப்பார்களாயின் அவர்கள் திருந்தி விடுவார்கள். ஆனால் அதிகார மமதை பல சமயங்களில் கடந்த காலப் பின்னடைவைகளை மறைத்து விடுவது அல்லது மறக்கச் செய்து விடுவதுதானே இங்கு நடக்கின்றது...!

# முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நாட்டையும் மக்களையும் மீட்போம்

## ரணில் விக்கிரமசிங்க திடசங்கற்பம்



எந்தவொரு அரசாங்கத்துக்கும் நாட்டை நிர்வகிக்க முடியாதளவிற்கு நெருக்கடியான நிலைமையே உருவெடுத்துள்ளது.

குறிப்பாகத் தேசிய பொருளாதாரம் மாத்திரமல்லாது அரச நிர்வாக கட்டமைப்பும் சீர்குலைந்துள்ளதாகத் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்த வருடத்தில் முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க உறுதிகொள்கிறேன் எனவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடிய போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில் தெரிவித்தவை வருமாறு -

அடுத்து வரும் எந்தவோர் அரசாங்கத்துக்கும் நாட்டை நிர்வகிக்க முடியாதளவிற்கு நெருக்கடியான நிலைமையே உருவெடுத்துள்ளது. குறிப்பாக தேசிய பொருளாதாரம் மற்றும் அரச நிர்வாக கட்டமைப்பு என்பனவும் சீர்க்குலைந்துள்ளன.

நிலையானதொரு கொள்கை இன்மையே இந்த நெருக்கடிக்குப் பிரதான காரணமாகும். எனவே, அந்த இலக்கை நோக்கி ஐக்கிய தேசிய கட்சி செயற்பட வேண்டும்.

மக்கள் மத்தியில் புதிய எதிர்பார்ப்புகள் தொடர்பில் நம்பிக்கை எழுந்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பும் ஐக்கிய தேசிய கட்சி மீதான நம்பிக்கையும் இங்கு முக்கியமானதொன்றாகும். எனவே, ஆட்சி மாறினாலும் தேசிய கொள்கைகளில் மாற்றம் ஏற்படாதவாறு நாட்டை வலுப்படுத்த வேண்டும்.

அவ்வாறானதொரு நிலையான கொள்கை இல்லாவிடின் ஒருபோதும் மீட்டெடுக்க இயலாது.

இந்த வருடத்தில் முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நாட்டையும் மக்களையும் பாதுகாக்க உறுதி கொள்வோம்.

கட்சி மறுசீரமைப்புகளுக்கு அமைய இளையோருக்கு கூடிய வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவொரு சிறந்த வெளிப்பாடு. தேர்தல்களில் மாத்திரம் அல்ல தேசிய திட்டங்களிலும் இளையோரின் பங்களிப்பு மற்றும் கருத்துகள் இடம்பெறவேண்டும் என்பதே நிலைப்பாடாகும். இதுவே நாட்டின் தேவையாகவும் உள்ளது. - என்றார்.

# வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு பணம் அனுப்புவதில் பாரிய வீழ்ச்சி!

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு பணம் அனுப்பும் நடவடிக்கைளில் பாரியளவில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெளிநாடுகளில் பணியாற்றுவோர் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகை என்பனவற்றால் இலங்கைக்கு கிடைக்கப்பெறும் அந்நிய செலாவணித் தொகை குறைந்துள்ளது.

இலங்கையின் அந்நிய செலாவணி வருமானத்தின் பிரதான வருமான மூலங்களில் ஒன்றான வெளிநாடுகளில் பணியாற்றுவோர் அனுப்பும் பணத்தொகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 32. 52 கோடி அமெரிக்க டொலர் பணம் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. கடந்த நவம்பர் மாதத்தில் இந்த தொகை 27.14 கோடி அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது.

அதேபோன்று கடந்த 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் அந்நிய செலாவணி வருமானம் 60 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 81. 27 கோடி டொலர் வருமானம் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் 2021 ஆம் ஆண்டு அந்த தொகை 32.52 கோடி டொலர்களாக குறைவடைந்துள்ளது.

ஒட்டுமொத்தமாக 2020 ஆம் ஆண்டில் 719. 39 கோடி டொலர் அந்நிய செலா வணி கிடைக்கப் பெற்றுள்ளதுடன், இது 2021 ஆம் ஆண்டு 549.1 கோடி டொலர்களாக குறைவடைந்துள்ளது.

இதேவேளை, சட்ட ரீதியான வழிமுறைகளைப் பயன்படுத்தி இலங்கைக்கு பணம் அனுப்பி வைக்குமாறு மத்திய வங்கி பல தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசால் மக்களுக்கு பல நிவாரணங்கள் அரச தகவல் திணைக்களம் கூறுகிறது

நெருக்கடி நிலைக்குப் பின்னர் சமகால அரசாங்கம் பல நிவாரணங்களை மக்களுக்கு வழங்கியுள்ளது.

நெருக்கடி நிலைமைக்குப் பின்னர், மீண்டும் தலைநிமிர்ந்துள்ள இலங்கை மக்களைக் கேந்திரமாகக் கொண்டு நடவடிக்கைகளை சமகால அரசாங்கம் மேற்கொண்டுவருவதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் பல நிவாரணங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த வருடம் ஆரம்பமானது முதல் வழங்கப்பட்ட நிவாரணப் பொதி, வரவு - செலவுத் திட்ட நிவாரணம் மற்றும் அரச தனியார் துறைகளை ஊக்குவிப்பதற்காக வழங்கப்படும் நிவாரணங்கள், இதில் முக்கியமானவையாகும். அரச ஊழியர்கள் மற்றும் அரசுடன் ஒன்றிணைந்த நிறுவன ஊழியர்களுக்காக 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கப்படுகின்றது.

இந்தக் கொடுப்பனவு சம்பளம் அதிகரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும் கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த 5 ஆயிரம் கொடுப்பனவு ஓய்வூதியக்காரர்களுக்கும் வழங்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

ஊனமுற்ற படைவீரர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக ஒரு கிலோ நெல்லுக்கு 75 ரூபா நிவாரண விலையும் சமுர்த்தி பயனாளிகளுக்கு ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படுகின்றது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 15 கிலோ கோதுமை மா நிவாரணமாக வழங்கப்படுவது பொதுமக்களுக்குக் கிடைத்த பாரிய வெற்றியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

“நாம் பயிரிடுவோம் - நாட்டை மேம்படுத்துவோம்” என்ற எண்ணக்கருவிற்கு அமைவாக மனை உற்பத்தித் திட்டத்தில் 20 பேச்சிற்கும் குறைவான காணிக்காக 5 ஆயிரம் ரூபாவும் 20 பேச்சிற்கு மேற்பட்ட உற்பத்திக் காணிகளுக்கு 10 ஆயிரம் ரூபாவும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

அனைத்து மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்காக இறக்குமதி வரி முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. இது பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணங்களில் முக்கியமானதாகும். அத்தோடு அரசாங்கம் மக்களுக்கு வழங்கியுள்ளமை தேசிய விவசாயிகள் மற்றும் உற்பத்தியைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகும் என்று அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மிருகவதை முற்றாக நிறுத்தப்படவேண்டும் எனதும் அரசினதும் நிலைப்பாடு இதுவே!

## பட்டிப்பொங்கல் தினத்தில் அமைச்சர் டக்ளஸ் உறுதி





மிருகவதை செய்யப்படுவதை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பட்டிப் பொங்கல் தினத்தில் கோமாதா உற்சவத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கு வலுச்சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

பட்டிப் பொங்கல் தினமான சனிக்கிழமை யாழ்ப்பாணம் சத்திரம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற் கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் -

என்னைப் பொறுத்தவரையில் மிருகவதை முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்பதில் தொடர்ச்சியாக எனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றேன்.

கடந்த காலங்களில் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு விவகாரத்திலும் தமிழர் தரப்புக்கள் சில அரசியல் நோக்கங்களுக்காக பல்வேறு கருத்துக்களை வெளியிட்டன.

எனினும், மிருகங்கள் சித்திரவதை செய்யப்படக் கூடாது என்பதில் நான் உறுதியான கருத்தினையே அன்றும் வெளியிட்டிருந்தேன். இந்நிலையிலேயே பசு மற்றும் இடப வதைக்கு எதிரான சட்டத்தைக் கொண்டு வருவதில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆர்வம் செலுத்தி வருகின்றார்.

அத்துடன் அந்த நிலைப்பாட்டிலேயே தற்போதைய அரசாங்கமும் இருக்கின்றது. அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டிற்கு வலுச்சேர்க்கும் வகையில் உங்களின் தீர்மானம் அமைந்திருக்கின்றது.

உங்களின் எதிர்பார்ப்புக்களை அடுத்த அமைச்சரவையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்று, குறித்த சட்டத்தை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்துவேன். - என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதன்போது, பசு மற்றும் இடப வதையைக் கட்டுப்படுத்துவதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட தீர்மானத்துக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அவருக்கான நினைவுச் சின்னம் ஒன்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடம் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவை மறுசீரமைப்பை கைவிடுவதற்கு கோட்டா முடிவு!

## ராஜபக்ஷக்கள் கலந்துரையாடலின் பின்

புதிய வருடத்தின் ஆரம்பத்தில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த அமைச்சரவை மறுசீரமைப்பை கைவிட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் மட்டுமல்லாது இராஜாங்க அமைச்சர்கள் தமது உயர் அமைச்சு பதவிகளை வழங்குமாறு தொடர்ந்தும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தமையே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

சில அமைச்சர்கள் மூன்றாவது தரப்பின் ஊடாகவும் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இது தலைவலியாக அதிகரித்ததால், ராஜபக்ஷவினர் இடையில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றுள்ளதுடன் இதன் போது அமைச்சரவை மறுசீரமைப்பை மேற்கொள்வதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது.



இதனால், நிறுவனங்கள் தொடர்பாக மாத்திரம் மாற்றங்களை செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

# வலுக்கட்டாயமாக இலங்கைக்கு கொண்டுவரப்படுகிறது ஒமிக்ரோன்

## ரவி குமுதேஸ் சாடல்



இலங்கைக்கு ஒமிக்ரோன் நோயாளிகளை வலுக்கட்டாயமாக கொண்டு வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என சுகாதார வல்லுநர்களின் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஸ் இந்த குற்றச்சாட்டை கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார்.

விமானங்கள் மூலம் இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் இங்கு வந்த இலங்கையின் சமூகத்துக்குள் ஒமிக்ரோன் தொற்றை பரப்பி விட்டு நாடு திரும்புகின்ற நிலை இன்று உருவாகியுள்ளது.

எனவே இலங்கையின் சுகாதாரக் கொள்கைகள் பிழையானவை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் இலங்கையில் ஒமிக்ரோனின் அதிகரிப்பு விகிதம் 50ஆக உயரக்கூடும் என்றும் ரவி குமுதேஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை அபேக்ஷா வைத்தியசாலைக்கு 8.8 கோடி ரூபா செலவில் எடுத்து வரப்பட்டுள்ள மரபணு வரிசை பரிசோதனை கருவி கடந்த பல மாதங்களாகப் பாவனையின்றி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனிக்குளம் போக்குவரத்து சேவையின்மை; 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பு

முல்லைத்தீவு - அம்பாள்புரம், வவுனிக்குளம் வீதியூடாக போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறாமையால் அந்த பகுதியில் உள்ள சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றன.

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள பாலிநகர் சந்தியிலிருந்து கொல்லவிளாங்குளம்,அம்பாள்புரம், ஆறாம்கட்டை ஆகிய கிராமங்களூடாக வன்னிவிளாங்குளம் சந்தி வரை செல்லும் பிரதான வீதி கடந்த பல ஆண்டுகளாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்டமையால் இதனூடாக மேற்கொள்ளப்பட்டு வந்த பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டன.

இதனால் இந்த பகுதியில் உள்ள மக்கள் தமது அன்றாட அடிப்படைத் தேவைகளை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக இப்பகுதியில் உள்ள பாடசாலை தரம் 5 வரையான வகுப்புக்களை கொண்டு இயங்குவதால் உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்கள் ஐந்து அல்லது 10 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வன்னிவிளாங்குளம், மாங்குளம், மல்லாவி ஆகிய பாடசாலைகளுக்கே செல்ல வேண்டியுள்ளது.

எனவே,மல்லாவியிலிருந்து மாங்குளம் ஊடாக செல்லும் பஸ் சேவையின் குறிப்பிட்ட சேவைகளையும், மாங்குளத்திலிருந்து மல்லாவி செல்லும் பஸ் சேவையின் குறிப்பிட்ட சேவைகளையும் இவ்வீதியூடாக மேற்கொள்ளுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை, இதனூடான பஸ் சேவையை மேற் கொள்ளுமாறு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ஆகியோருக்கு மகஜர்களை வழங்கி வைத்த போதும் இது வரை எந்தவித நடவடிக்கைகளும் இல்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# போதையில் ஒருவர் மீது கோரத்தாக்குதல் திருமலையில் மூவருக்கு விளக்கமறியல்

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நபர் ஒருவரைத் தாக்கிக் காயப்படுத்திய மூன்று சந்தேகநபர்களை இம்மாதம் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை, பாலையூற்று பகுதியைச் சேர்ந்த 19, 21 மற்றும் 37 வயதுடைய மூவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் பாலையூற்று பகுதியில் மதுபோதையில் நபர் ஒருவரை தாக்கி காயப்படுத்தினர் என உப்புவெளி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் காயங்களுக்குள்ளான நபர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனவும் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் தொடர்பாக உப்புவெளி பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய மூவரை கைது செய்து திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் வாசஸ்தலம் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அவிசாவளையில் பஸ்ஸை தீ வைத்து எரித்த மக்கள்

பஸ் ஒன்றில் மோதுண்டு நபர் ஒருவர் உயிரிழந்த நிலையில் குறித்த பஸ்ஸுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

அவிசாவளை மாலியன்கம ரிட்டிகஹவெல பகுதியில் இவ்வாறு பஸை பிரதேச வாசிகள் தீ வைத்து, தீக்கிரையாக்கியுள்ளனர்.

பஸ்ஸில், மோதுண்டு, சைக்கிள் ஓட்டுநர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, ஆத்திரமடைந்த பிரதேசவாசிகள் பஸ்ஸுக்குத் தீ வைத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றே, இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 65 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார். விபத்தை அடுத்து, பஸ் சாரதி தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவிசாவளை பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகைத் தந்து, பஸை தமது பொறுப்பில் எடுக்க பொலிஸார் முயற்சித்த தருணத்திலேயே, பஸ்ஸுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளது. இந்த அமைதியின்மையினால் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அவிசாவளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 254


### 652.சன்சோனி ஆணைக்குழுவில் தமிழ் மக்கள் அதீத நம்பிக்கை வைத்தார்களே, கடைசியில் ஏமாற்றத்தில் தானே அதுவும் முடிந்தது?

எதிர்பார்ப்புகளில் யதார்த்தங்களிற்கும் மேலாக நம்பிக்கை வைப்பது தமிழ் மக்களின் வழமை. ஓரளவு அது இங்கும் நடந்தது. ஆனால் பொதுவாக, இங்கு ஒட்டுமொத்த ஏமாற்றம் பேரினவாதிகளைத் தவிர மற்றெல்லோருக்கும் இருந்தது.

சன்சோனி ஆணைக்குழு அமைக்கப்பட்டத்தின் பிரதானமான நோக்கமே ஒகஸ்ட் – செப்டெம்பர் 1977 காலப்பகுதியில் நடந்த வன்முறைச் சம்பவங்கள், அதன் தன்மைகள், காரணங்கள், அதற்கு பொறுப்பான அமைப்புக்கள் போன்றனவற்றைக் கண்டறிவதும் அவை மீள் நிகழாமைக்கு வழிமுறைகள் சமர்ப்பிப்பதும்தான்.

ஆணைக்குழு தனது பொது அமர்வுகளை பெப்ரவரி 1978இல் தொடங்கி, 10 டிசெம்பர் 1979இல் 298 நாட்களின் பின் முடித்தது. 967 சாட்சிகளின் வாக்குமூலங்கள் 15,264 பக்கங்களில் 1,665 ஆவணங்களுடன் பதியப்பட்டன.

புராண காலத்திலிருந்து சரித்திர காலங்கள், தொல்லியல், ஜனநாயகம், பயங்கரவாதம், இன ஒடுக்குமுறை, மனித உரிமைகள், சுயநிர்ணய உரிமை எனப் [illegible]



ஆணையாளர் சன்சோனி

லெஸ்லி பார்ட்லெர்ட் போன்றவர்களின் அலுவலங்கள் 1983இல் கலவரத்தில் எரிக்கப்பட்டமையால், அவர்களிடமிருந்தவை எல்லாம் பறிபோயிற்று. இவைகளெல்லாவற்றையும் கூட ஆணைக்குழுவிடம் இருக்க கூடியவையிலிருந்து, மீட்டுக்கொள்ள வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம்.

அவற்றை விட்டு இந்த கேள்விக்குத் தேவையான சிலவற்றை குறிப்பிடுகிறேன்.

விசாரணைகளில் பங்கெடுத்த நிதியத்தின் சட்டத்தரணிகளுக்கு கூட, அதன் அரசியல்களாலும், முக்கியமாக கண்டியில் நடந்த விசாரணைகளின் போது இடம்பெற்றவைகளாலும் நம்பிக்கையின்மை வந்து ஆணைக்குழுவிலிருந்து வெளியேறுவதற்கு சிந்தித்தோம். ஆனால் சமர்ப்பணங்களும் ஆவணங்களும் கையளிப்படுவதே மீதமிருந்தமையால் அவற்றை முடிக்கக் கடைசி வரை பங்குபற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 8 பெப்பெவரி 1978 பொது அமர்வு தொடங்கிய போது, 15 – 16 சட்டத்தரணிகள் தமிழர் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்துக்காக ஆஜராகியிருந்தார்கள். ஆனால் கண்டியில் 10 டிசெம்பர் 1979 கடைசியான அமர்வு இருந்த போது, ஒரே ஒரு சட்டத்தரணி மணிவாசகம் அண்ட்வூர்ட்டுடன் கந்தசாமி நிதியத்தின் காரியதரிசியாக சென்றிருந்தார். நடந்த பல சம்பவங்களால், அவர்களுக்குக் கூட விரக்திகள் ஏற்பட்டிருந்தன. அதனால் அவர்களது ஆர்வங்களே குன்றியிருந்தன.

விசாரணைகுழு அமைப்பதற்கான நாடாளுமன்ற விவாதங்கள் நடந்த பொழுதே, பொலிஸ் தரப்பினர், முக்கியமாக யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் அதிகாரிகள், தங்கள் மீது பலத்த குற்றங்கள் சாட்டப்படும் என எதிர்பார்த்தார்கள். விசாரணைக்கான சமர்ப்பணங்களுக்கு காலக்கெடுக்கள் விதிக்கப்பட்டு, அதன் பின் 8 பெப்ரவரி 1978 யாழ்ப்பாணத்தில் தனது முதலாவது பொது அமர்வை தொடங்கி, 150 சாட்சியங்கள், முக்கியமாக யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்கள் பற்றியவை விசாரிக்கப்பட்டன. அந்த சாட்சியங்களில் அநேகம் பாதிக்கப்பட்டவர்கள், அவைகளுக்கெல்லாம் பொலிஸாரையே குற்ற சாட்டினர். இதனை அடுத்து 21 மார்ச் 1978 பிரபல கிரிமினல் சட்டத்தரணி ஈ.சி.பி.(பண்டி)சொய்சா ஆணைக்குழு முன் ஆஜராகி (அவருடன் இன்னும் சில சட்டத்தரணிகள் வந்திருந்தார்கள்) சமர்ப்பணம் வைத்தார்.

அதன் சுருக்கம், இந்த ஆணைக்குழு விசாரிக்கும் பிரச்சினைகளின் அடிப்படையே, தமிழர் விடுதலை கூட்டணியாலும், வட பகுதியிலுள்ள தமிழ் மக்கள் தனித் தமிழ் நாட்டிற்காக விடுதலை போராட்டம் நடத்துவதாலும் ஏற்பட்டது தான். வட பகுதி பொலிஸார், அந்த விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பதில் முன்நிலை வகிக்கிறார்கள். அதனால் குற்றம் சாட்டப்படுகிறார்கள் என்பதே.

நிதியத்தின் சட்டத்தரணிகள், சொய்சா எந்தவொரு சமர்ப்பணமும் எழுத்தில் தராமல், சடுதியாக, சாட்சியங்களின் விசாரணை நடக்கும் போது, யாருக்காக ஆஜராகினார் என்பது தெளிவாக்கப் பட்டாமலேயே, திசை திரும்பும் வாதங்களில் ஈடுபடுகிறார் என எதிர்ப்புக்கள் தெரிவித்தனர். அதற்கு சொய்சா, நேரடியாக யாழ்ப்பாணத்தில் குற்றம் சாட்டப்பட்ட சிலரை பிரதிநிதிப்படுத்துகிறேன் என்றில்லாமல், அருவல் நெருவலாக, பொதுவாக பொலிஸ், பாதுகாப்புப் படையினருக்காக – முக்கியமாக இந்தக் காலங்களில், இந்தப் பகுதிகளில் கடமையாற்றி கொண்டிந்தவர்களுக்காக எனக் கூற, அதற்கு பதிலளித்த ஆணையாளர், அப்படியானால், நேரம் வரும் போது, எந்தெந்தப் பொலிஸ் பாதுகாப்பு படையினருக்கு விளக்கமளிக்குமாறு நான் அறிவிப்பு தருகிறேன், அப்பொழுது நீங்கள் அவர்களுக்காக முன்னிலையாகுங்கள் என்று பதில் தந்தார்.

இவற்றையே சட்டத்தரணிகளாகப் பார்த்தபொழுது, பொலிஸ் அதிகாரங்கள்



(பண்டி) சொய்ஸா

எந்த வகையில் விசாரணையைத் திசை திருப்ப வழி பார்க்கும், பெரும்பான்மையை, அதன் அதிகாரத்தைத் துணைக்கு அழைக்கும் என்ற தூரப் பார்வை இருந்தது.

ஆணைக்குழுவிற்கு திஸ்ஸ தேவேந்திரா. காரியதரிசியாகவும், சிவசுப்பிரமணியம் உதவிக் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களனை வரதும் ஆவணங்கள் பதிவது, பொலிஸ் நிலைய புத்தகம் பதிவுகளுக்காக அறிவிப்புகள் (சமன்ஸ்) பெறுவது போன்றவைக்காக அடிக்கடி தொடர்புகள் இருந்தன. அநேக நாள்களில், சிவசுப்பிரமணியம்தான் கடமைகள் செய்தார். அருமையான, பண்பானவர்.


எங்கள் சட்டத்தரணிகளும் – நான் கூட – நடப்புகளின் சில சுரண்டல்களுக்காக, அவரிடம், இடைவேளைகளில் பேச்சு கொடுப்பது உண்டு. அவற்றிலிருந்து ஆணையாளர் சட்டத்தரணி சொய்சாவின் பேச்சில், பெரிய மரியாதை வைத்த அபிப்பிராயம் சொல்லவில்லை, அனர்த்தமானது எனவே பார்க்கிறார் என்றும், யாழ்ப்பாணப் பொலிஸாரது கைங்கரியங்களில் ஆழமான யோசனையும் இடையில் அகப்பட்ட தமிழ் பொலிஸாரை ஒட்டி இரக்கமும் உண்டு என்ற சுண்டல் தகவல்கள் யாழ்ப்பாணத்திலேயே கிடைத்தன.

இவற்றை ஒட்டி, எங்களோடு உதவிகள் தந்து கொண்டிருந்த உமா மகேஸ்வரன், ஊர்மிளா, மண்டுர் மகேந்திரன், இளைஞர் பேரவை புஸ்பராஜா போன்றோருக்கும் அரசியல் தலைவர்களுக்கும் சில புத்திமதிகளைச் சொல்லியிருந்தோம்.

அவை என்ன?

அவற்றை நாளை பார்ப்போமா?

(வளரும்)



VII වැනි සැසි වාර්තාව – 1980
SESSIONAL PAPER No. VII—1980

(ඉංග්‍රීසි මුද්‍රණය/English Print)

1977 අගෝස්තු 13 සිට සැප්තැම්බර් 15 දින දක්වා සිදු වූ සිද්ධීන් පිළිබඳ ජනාධිපති පරීක්ෂණ කොමිෂන් සභා වාර්තාව

REPORT OF THE PRESIDENTIAL COMMISSION OF INQUIRY INTO THE INCIDENTS WHICH TOOK PLACE BETWEEN 13th AUGUST AND 15th SEPTEMBER, 1977

Printed on the Orders of the Government

1980 ජූලි/1980 July

PRINTED AT THE DEPARTMENT OF GOVERNMENT PRINTING, SRI LANKA

TO BE PURCHASED AT THE GOVERNMENT PUBLICATIONS BUREAU, P. O. BOX 500, SECRETARIAT, COLOMBO

Price | Rs. 16.50 — Postage | Rs. 2.25

சன்சோனி அறிக்கையின் முன்பக்கம்

# நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூட தெரிவாகாத நிலையில் ரணிலின் கட்சி!



## எம்.கே.சிவாஜிலிங்கம் சாடல்

22 தேர்தல் மாவட்டங்களில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூடத் தெரிவாகாத நிலையில் ரணிலின் கட்சி உள்ளது எனவும், சிறிய சிறிய கட்சிகள் போல சில ஆயிரம் வாக்குகளை எடுத்து தேசியப்பட்டியல் கிடைத்துள்ளதெனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவரது கட்சி அலுவலத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்தளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு தடவைகளும் நான் தோற்கடிக்கப்பட விடுதலைப் புலிகள்தான் காரணம் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பல தடவைகள் இதற்கு நாம் பதில் தெரிவித்தாலும் அவருக்கு மீண்டும் பதில் சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றிப் பேசுவதற்குத் தயாரா என்ற வாக்குறுதியைத் தர தயாரா என்ற கேள்வியுடன் அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவை சந்திக்கச் சென்றேன்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்க முடியாமல் போய்விட்டது. அவரின் பிரத்தியேக செயலாளருக்கும் வன்னியில் இருந்து அவசர செய்தி ஒன்று வந்துள்ளது என்பதை ரணிலிடம் தெரிவியுங்கள் என்று கூறிவிட்டு சென்றுவிட்டேன்.

பதில் கிடைக்கவில்லை. மூன்று நாள்கள் இருந்துவிட்டு நான் மீண்டும் தமிழ்ச்செல்வனிடம் சென்று எந்த பதிலும் கிடைக்கவில்லை என்று தெரிவித்திருந்தேன்.

சாதகமான பதில் கிடைத்திருந்தால் பகிஷ்கரிப்பு திட்டத்தை மீளப்பெறுவோம் என்றும் விரும்பியவர்களுக்கு மக்கள் வாக்களிக்கலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

அந்த அடிப்படையிலேயே 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்டது. தேர்தல் முடிவுகளின்படி ரணில் விக்ரமசிங்க தோல்வியடைந்தார். யாழ்ப்பாணத்தின் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாக்களிக்கவில்லை.

ரணில் விக்ரமசிங்கவை பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் சந்தித்த பொழுது நான் அனுப்பிய செய்தி உங்களுக்குக் கிடைத்ததா என்று கேட்டேன். அப்போது ரணில் விக்ரமசிங்க, இந்த செய்தி கிடைத்தது. ஆனாலும் கட்சியின் உயர்மட்டத் தலைவர்களுடன் பேசிய போது கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம எவ்வாறான பதிலும் அனுப்பத் தேவையில்லை எனத் தெரிவித்தமையால் அதனைத் தவிர்த்துக் கொண்டேன். ஆனால் இப்பொழுது அதனை செய்திருக்கலாம் என்று நினைக்கின்றேன். - என்றார்.

22 தேர்தல் மாவட்டங்களில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூடத் தெரிவாகாத நிலையில் ரணிலின் கட்சி உள்ளது. சிறிய சிறிய கட்சிகள் போல சில ஆயிரம் வாக்குகளை எடுத்து தேசியப்பட்டியல் கிடைத்துள்ளது.

நீங்கள் விடுதலைப் புலிகள் பலமாக இருக்கும் பொழுது சமஷ்டியைப் பற்றி விவாதிக்கத் தயார் என்றும் இல்லை என்றால் மீண்டும் ஆயுதப் போராட்டம் ஏற்பட வேண்டும் என்றுதான் விரும்புகிறீர்களா என்ற கேள்வி எழுகிறது. சர்வதேச இனப் படுகொலைகள் உட்பட நடந்த குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை சம்பந்தப்பட்ட போர்க்குற்றவாளிகள் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். அதே போல நீதி கிடைக்கக் கூடிய வகையிலே ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொதுசன வாக்கெடுப்பை சர்வதேச சமூகம் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

# ஊடகங்கள் பொது மக்களுக்கு தவறாக கற்பிதம் செய்கின்றன

## அமைச்சர் டக்ளஸ் சாடல்

ஊடகங்கள் மக்களுக்குத் தவறான வழிகளை வெளிப்படுத்துகின்றன எனத்தான் என்னால் உணரக்கூடியவாறு உள்ளது. ஊடகங்கள் சொல்லும் அளவிற்குப் பிரச்சினை இல்லை. பிரச்சினை எல்லாம் ஊதிப் பெருப்பிக்கப்படுகின்றனவாகத்தான் என்னால் பார்க்க முடிகிறது எனக் கடல் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் மாமடுச்சந்தி வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தின் அறநெறி பாடசாலையின் ஆண்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

அறநெறி பாடசாலை பிள்ளைகள் தங்களுடைய ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்கள். பாராட்டக்கூடியது. அதனை ஊக்குவித்தவர்களுக்கும் பாராட்டினையும் வாழ்த்துக்களையும் சொல்லி வைக்கின்றேன். கடந்த 2004 ஆம் ஆண்டு என்னைச் சந்தித்தவர்களிடம், இந்த அழிவு யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்கு வருமாறு தான் நான் பல தடவைகள் சொல்லியுள்ளேன்.

எங்களுக்கு ஒரு காலகட்டத்தில் ஆயுத போராட்டத்துக்குரிய தேவை ஏற்பட்டிருந்தமை உண்மைதான். ஆனால் இலங்கை - இந்திய ஒப்பந்தத்துடன் 1987 ஆம் ஆண்டுடன் நாங்கள் அதற்கு முற்றுப்புள்ளி கண்டிருக்க வேண்டும்.

சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது என்பது போல தங்கள் சுயலாபத்துக்காக மக்களைத் தவறாக வழிநடத்தி அவர்களைப் பலிகொடுத்தது மாத்திரமல்ல, ஈடு வைக்கின்ற செயல்களையும் செய்து விட்டுப்போய்விட்டார்கள். தொடர்ந்து இருக்கின்றவர்கள் அதனைச் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

நீங்கள் சரியானவர்களைத் தெரிவு செய்யுங்கள், அப்போதுதான் நீங்கள் வாழ்க்கையில் முன்னேறலாம் என்று கடந்த காலங்களிலும் சொல்லியுள்ளேன். முன்னேறலாம் என்பது அடிமைத்தனமான வாழ்க்கையல்ல கௌரவமான வாழ்க்கையுடன் இன்று நாங்கள் அப்படித்தான் இருக்கின்றோம்.

இந்த அழிவு யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் எங்கள் கௌரவத்தில் ஏதாவது மாசு படவில்லை என்று நான் நினைக்கின்றேன். அப்படி இருக்குமாக இருந்தால் நீங்கள் என்னிடம் சொல்லலாம். இன்று இருக்கின்ற கௌரவமான நிலைமையைப் பாதுகாத்து நாங்கள் மேலும் வளர்த்தெடுக்க வேண்டும்.

அப்படியான நிலைமைக்கு நாங்கள் செல்ல வேண்டுமாக இருந்தால் சரியாக நீங்கள் அடையாளம் கண்டு உங்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யவேண்டும். இன்று நீங்கள் பல பிரச்சினைகளை முன்வைத்துள்ளீர்கள். இந்தப் பிரச்சினைகள் எனக்குத் தெரியும்.

போர்க் காலத்தில் தீர்க்கமுடியாது ஏன் என்றால் அப்போது கோவில்களுக்குப் பணம் கேட்கும் போது என்னால் முடிந்த அளவிற்கு நான் கொடுத்தோன். ஆனால், எனக்கு தெரியும் அந்த முழுக்காசும் கோவில்களுக்குப் போயிருக்காது, அன்று யார் இங்கு நாட்டாமை செய்துகொண்டிருந்தார்களோ அவர்களுக்குத்தான் அதில் பெருந்தொகை பணம் போயிருக்கும்.

இப்போதைக்குத் தேர்தல் ஒன்றும் வரப்போவதில்லை, நீங்கள் முன்னேற வேண்டுமாக இருந்தால் உங்கள் கௌரவத்தைப் பாதுகாத்து மேலும் வலுப்படுத்த வேண்டுமாக இருந்தால் நீங்கள் சரியானவர்களைத் தெரிவு செய்திருக்கவேண்டும்.

நீங்கள் தெரிவு செய்யவில்லை. இந்த மாவட்டத்துக்கு அரசாங்கம் நிறைய நிதிகளை ஒதுக்கியுள்ளது. எங்களின் அரசாங்கம் எந்த வகையிலும் பாரபட்சம் அற்ற வகையில் அந்தந்தப் பிரதேசங்களுக்குத் தேவையான நிதிகளை ஒதுக்கியுள்ளது.

நாங்கள் 80 களில் ஆயுதம் தூக்கியபோது அன்று இருந்த ஆட்சியாளர்கள் ஒரு பாரபட்சமாக அல்லது மாற்றான் தாய் மனப்பான்மையுடன் அல்லது இன ரீதியாகத்தான் அணுகினார்கள். ஆனால் இன்று உள்ள அரசாங்கம் அப்படி அல்ல. நானும் அரசின் மூத்த அமைச்சராக இருக்கின்றேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் இந்த அரசாங்கம் முன்னோக்கிச் செல்கின்றது. ஆனால், ஊடகங்கள் மக்களுக்குத் தவறான வழிகளை வெளிப்படுத்துகின்றன என்றுதான் என்னால் உணரக்கூடியவாறு உள்ளது. ஊடகங்கள் சொல்லும் அளவிற்குப் பிரச்சினைகள் இல்லை. பிரச்சினை எல்லாம் ஊதிப் பெருப்பிக்கப்படுவனவாகத்தான் என்னால் பார்க்கப்படுகின்றது.

எனவே மக்களின் பிரச்சினைகள் ஒன்று ஒன்றரை ஆண்டுகளுக்குள் தீர்த்து விடுவோம். நாங்கள் ஆட்சியைப் பொறுப்பெடுக்கும் போது கடந்த கால ஆட்சியாளர்கள் கஜானாவை திறை சேரியைக் காலி பண்ணிவிட்டுத்தான் எங்களுக்குக் கொடுத்தார்கள்.

அதில் ஒன்று இந்த வீட்டுத்திட்டம். அந்த வீட்டுத்திட்டத்துக்கு அன்றைய அரசாங்கம் அமைச்சரவை அனுமதி கொடுத்தது இருக்கின்ற காசிற்குள் செய்யச்சொல்லி. ஆனால் அன்று இருந்த அமைச்சர் என்ன செய்தார்? அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டிபோட இருக்கின்ற படியால் ஒருவீட்டுக்கு பத்து லட்சம் என்று சொன்னால் ஒருவீட்டுக்கு ஐம்பதாயிரம் கொடுத்து வாக்குகளை அபகரிப்பதுதான் அருடைய நோக்கமாக இருந்தது. மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் நோக்கம் இருக்கவில்லை.

அன்பான மக்களே! வருகின்ற மூன்று, நான்கு மாதங்களுக்குள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமத்துடன் கலந்துரையாடல் என்றவகையில் பொறுப்பாக இருப்பவர்களுக்கு அரசாங்கம் வழிகாட்டியுள்ளது. அந்தந்தக் கிராமங்களுடன் கதைத்து அவர்களின் கோரிக்கைகளை முன்னுரிமைப்படுத்தி அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்று சொல்லியுள்ளது.

பிரதேச சபைக்குக் கூட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமத்துடனான இந்த அரசங்கத்தின் கொள்கை வேலைத் திட்டத்துக்கு அமைவாகக் கிராமத்தோடு உரையாடி நீங்கள் முன்வைத்துள்ள பல பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க முடியும். - எனத் தெரிவித்துள்ளார்.

# மின்தடை நேரத்தில் நீருக்கும் தடையாம்!

## கொழும்பு மக்களுக்கு வாசு அறிவிப்பு

எதிர்வரும் நாள்களில் மின் தடை ஏற்படும் சந்தர்ப்பங்களில் கொழும்பு நகருக்கான நீர் விநியோகம் தடைப்படும் என நீர் வழங்கல் அமைச்சரான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அம்பத்தலை நீர் சுத்திகரிப்பு நிலையத்தை அண்மித்த பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் சந்தர்ப்பத்தில் இந்த நிலை ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள பிரதான நீர் வழங்கல் நிலையமான அம்பத்தலை நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு ஏனைய சுத்திகரிப்பு நிலையங்களைப் போன்று இல்லாமல், நீர் இறைக்கும் இயந்திரங்களின் செயற்பாட்டுக்கு தடையற்ற மின்சாரம் வழங்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, அம்பத்தலை நீர் சுத்திகரிப்பு நிலையத்தை அண்மித்த பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்படும் பட்சத்தில், கொழும்புக்கு தண்ணீர் பஸசர்கள் மூலம் மாத்திரமே தண்ணீர் வழங்க முடியும் என மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழிலிருந்து கொழும்புக்கு கொண்டுசென்ற கஞ்சா மீட்பு

யாழிலிருந்து கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்ட 250 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா, ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கூலர் ரக வாகனம் ஒன்றை சனிக்கிழமை பிற்பகல் வவுனியா, ஈரப்பெரியகுளம் சோதனை சாவடியில் வழிமறித்து சோதனை செய்த போது குறித்த வாகனத்தில் கஞ்சா மறைத்துக் கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த வாகனத்தை முழுமையாகச் சோதனை செய்த போது பொதி செய்யப்பட்ட நிலையில் 250 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது.

இதனை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் எடுத்துச் சென்றமை தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நுட்பியல் அவத்தை





ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - (தகவல் தொழில்நுட்பம்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
virtualict22@gmail.com

05

தைப்பொங்கல் எமது வாழ்வோடு பின்னிப் பிணைந்த ஒரு நன்றி செலுத்தும் விழாவாகும். என்னதான் தொழில்நுட்பங்கள் எமது வாழ்க்கையில் ஊடுருவி விட்டாலும் உடலுழைப்பின் சிறப்பினை, தைத்திருநாளைக் கொண்டாடும் மகிழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது. 'போன வருடத் தைத்திருநாளிற்கு நான் பிள்ளைகளிற்கு ஒன்லைனில் உடுப்புகள் வாங்கினேன்' என எனது நண்பி என்னிடம் கூறினார். ஒரு நாள் முழுவதும் தேடி வாங்கினேன். ஆனால் இந்த வருடம் இலகுவாக வாங்கிவிட்டேன். ஏனெனில் தற்போது நான் இணையத்தில் தேடமுற்பட்ட போது அது தானாகவே எனக்கு பல ஆடைத்தெரிவுகளைக் காட்டியது. அதனால் இந்தத் தடவை இலகுவாக விரைவாக ஆடைகளை ஓடர்செய்ய முடிந்தது.' என்று குறிப்பிட்டார். இது எவ்வாறு நடைபெறுகிறது எனவும் ஆச்சரியப்பட்டார். 'எமக்குத் தேவையானதை இணையம் தன்பாட்டிலேயே எப்படி அறிந்து கொள்கிறது' என்று ஆச்சரியப்பட்டார். இது பற்றிய சிறு விளக்கத்தினை இதில் எழுதுவது பயனுள்ளதாக இருக்கும் என நினைக்கிறேன.

பொதுவாக நாம் எமது வீட்டுப் பொருள்கள் வாங்குவதற்கு வீட்டிற்கு அருகிலுள்ள கடைக்கு அல்லது வேறு ஒரு கடைக்கு கடைத்தெரிவை மாற்றாது அன்றாடம் சென்று வருவோம். நாளடைவில் கடைக்காரருக்கு எமது விருப்பங்கள் அனைத்தும் தெரிந்திருக்கும். எந்த வகையான அரிசி, பருப்பு, சீனி, பால்மா வகைகள், என்பனவற்றை நாம் கொள்வனவு செய்வோம் என்பன போன்ற அனைத்து விவரங்களையும் அவர் தெரிந்து



வைத்திருப்பார். மேலும் அவர் எம்முடன் கொண்ட பழக்கத்தினால் எமக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது என்பதனையும் கவனித்து வைத்திருப்பார். அவரிடம் புதிதாக ஏதும் பொருள்கள் வரும் போது எமக்கு ஏற்ற பொருள்களை எம்மிடம் காட்டி இது உங்களிற்குப் பிடிக்கும் வாங்கி பயன்படுத்திப்பாருங்கள் எனக் கூறுவார். நாங்களும் அவற்றை வாங்குவோம். இதனால் குறித்த வியாபாரிக்கு வியாபாரம் பெருகுகிறது. எமக்கு பிடித்த பொருளை வாங்கிய திருப்தி ஏற்படுகிறது.

இது போன்ற நிகழ்வுகளே தற்போது இணைய வழியாக நடைபெறுகிறது. நாம் இணைய வழியாக பொருள்களை வாங்கும் போது எமது விருப்பங் கள் தேவைகள் போன்றவற்றை விற்பனை வலையத் தளங்கள் பதிந்து கொள்கின்றன. பின்னர் அடுத்த முறை அந்த வலையத்தளத்திற்கோ அல்லது அதன் கிளைகளுக்கோ செல்லும் போது வேறு பல புதிய எமது விருப்பத்திற்கு ஏற்ற பொருள்கள் விளம்பரங்களாக எமக்கு வரும். நாம் எந்தப் பொருளில் அதிக விருப்பம் காட்டுகிறோமோ அந்தப் பொருள் எம் கண்ணில் அடிக்கடி தென்படுமாறு வந்து போகும். இதுவே Machine Learning என்று அழைக்கப்படும். இந்த Machine learning ன் அடிப்படையில் அமைவதே செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence). இது பெரும் தரவின் அடிப்படையில் அதாவது Big data analysis இனால் சாத்தியமாகிறது. இது பற்றியும் இங்கு பார்ப்போம்.

செயற்கை நுண்ணறிவு, நம் வாழ்வின் ஒரு அங்கமாகிவிட்டது. மேம்பாடுகள் முதல் தனிப்பயனாக்கம், தேடல் முடிவுகளைத் தரவரிசைப்படுத்துதல், தயாரிப்புகளைப் பரிந்துரைத்தல் மற்றும் சாதனங்களைப் புரிந்துகொள்வது மற்றும் கட்டுப்படுத்துவது, சுற்றுச்சூழலின் சிறந்த மாதிரிகளை உருவாக்குவது, தொழில்துறையை தானியங்குபடுத்துவது வரை, 2022ஐ நோக்கிப் பார்க்கும்போது, எல்லா இடங்களிலும் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டைக் காண்கிறோம்.

## Cloud Storage

ஆரம்ப கால கட்டங்களில் எமது மூதாதையினர் பல விடயங்களை ஞாபகத்தில் வைத்திருந்தனர். ஞாபகத்தில் வைத்துக் கொள்ளமுடியாத அளவிற்கு விடயங்கள் சேர்ந்த போது அதனை கடதாசியில் குறித்து வைத்துக் கொண்டனர். பின்னர் அவை போதவில்லை அல்லது அதிலிருந்து திரும்ப எடுப்பது கடினமான போது அவற்றை கணனியில் சேமித்து வைத்தனர். பின்னர் ஒரு கணனியில் சேமித்து வைக்கக்கூடிய எல்லையையும் தாண்டிய போது இன்னுமொரு கணனி அல்லது சேமிப்பு சாதனத்தில சேமித்து வைத்தனர். இவ்வாறாக பல கணனிகளையும் சேமிப்பு சாதனங்களையும் விலைகொடுத்து வாங்கி சேமித்து வைத்தனர். இதற்கு பெரும் தொகைப் பணம் செலவு செய்ய வேண்டியிருந்தது. இதற்கு மாற்றாக பெரும் வணிக நிறுவனங்கள் தங்களினது பெரும் வணிக தரவுகளை இணையத்தில் சேமித்து வைக்கின்றனர். இதனை cloud storage என்பர். பொதுவாக இலவசமாக தரவுகளை சேமித்து வைக்கலாம். இதனை எம்மால் பார்க்க முடியாது. ஆனால் கணனியில் செய்வது போன்று அனைத்து வேலைகளையும் இங்கு செய்ய முடியும். Amazon, Google, Cloudera போன்றவை இத்தகைய சேவைகளை வழங்குகின்றன.




## பெரும் தரவு (Big data)

தற்போது பல்வேறு முறையில் இணைக்கப்பட்ட கணனியிலிருந்து கோடிக்கணக்கான தகவல்களை அலசி ஆராய்ந்து அதனடிப்படையில் எமக்குத்தேவையான முடிவுகளை எடுப்பதற்கு தரவுகளிடையே செய்யப்படும் பகுப்பாய்வு Big data analysis ஆகும். இது பெரும்பாலும் மின்வர்த்தகம் மற்றும் சமூக ஊடகத் துறைகளில் பங்கேற்கிறது. இதனாலே நாம் இணையத்தில் ஒரு பொருளை தேடும் போது அதனது தரவு சேமிக்கப்பட்டு பின்னர் அவை ஆராயப்பட்டு அவற்றிற்கு ஒத்த வேறு பொருள்களினை எமக்கு காட்சிப் படுத்தவும் வாங்குமாறு விளம்பரப்படுத்தவும் செய்கின்றது. இது எமக்கு சில பொருள் தெரிவினை திறம்பட செய்ய உதவிபுரிகிறது. தற்போது இச்சேவை மேலும் விரிவடைந்து ஒவ்வொரு துறையும் அதனதன் வளர்ச்சிக்காகவும் திறம்படச் செயல்புரிவதற்காகவும் மிகமிக நுண்ணிய தகவல்களையெல்லாம் சேமித்து வைக்கத் தொடங்குகிறது. இத்தகைய எண்ணிலடங்கா தகவல்களையெல்லாம் எங்கு சேமித்து வைப்பது (Data Storage) அதனை எவ்வாறு தரம் பிரிப்பது (Data Mapping) மிக முக்கிய தகவல்களை மட் டும் எவ்வாறு மொத்த தகவல்களிலிருந்து பிரித்தெடுப்பது (Data Mining) பிரித்தெடுத்த தகவல்களை எவ்வாறு ஒன்றோடு ஒன்று இணைத்து (Data Pipeline) அர்த்தமுள்ள தரவுகளாக மாற்றுவது அதனை எவ்வாறு பயனருக்கு சமர்ப்பிப்பது (visualization of reports) போன்ற அனைத்து வேலைகளையும் பெரும் தரவு (Big data) புரிகிறது.

இந்த பெரும் தரவானது ஒழுங்கான வடிவத்தில் உள்ள தரவுகளை மாத்திரமல்லாது ஒழுங்கற்ற வடிவ தரவுகளையும் சேமிக்கக்கூடியது. அதாவது facebook போன்ற வலைத்தளத்தில் ஒரு பயனரின் அடிப்படை விபரங்களோடு சேர்த்து அவரின் மனநிலை , விருப்பு வெறுப்புகள் செயல்பாடுகள் விமர்சனங்கள் போன்ற அனைத்து விதமான தகவல்களும் சேமிக்கப்படும் . இவை அனைத்தும் எந்த வடிவத்திலும் இருக்கமுடியும். வார்த்தைகளாகவோ, படங்களாகவோ, அல்லது வேறு எவ்வாறு காணப்படினும் சேகரிக்கப்பட்டு அலசிஆராந்து பகுப்பாய்வு செய்யப்படும்.

இன்னும் சொல்லப்போனால் வருங்காலத்தில் ஒருவரின் மனநிலை தகுதி குணயியல்புகளுக்கேற்ற அவரிற்கு ஏற்ற வாழ்க்கைத்துணையை பெரும் தரவு பகுப்பாய்வு கண்டுபிடித்து தரும் என்பது வியப்பில்லை.

# பொருளாதார நிலைமைகளைச் சீரமைக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

பணவீக்க உயர்வு, அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, வெளிநாட்டு நாணயப்பற்றாக்குறை, மின்விநியோகத்தடை உள்ளிட்ட பல்வேறு காரணிகள் இனியும் தாமதிக்காமல் தற்போதைய பொருளாதார நெருக்கடியை சீரமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பொருளாதாரத்தின் தற்போதைய எதிர்மறையான போக்கு சட்டத்தின் ஆட்சியிலும் நாட்டின் நிர்வாகத்திலும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்றும் எச்சரித்துள்ளது.

தற்போது முகங்கொடுக்கும் நெருக்கடிக்கு நிலைபேறான தீர்வை வழங்கக் கூடிய, அங்கீகரிக்கப்பட்ட நிதிவழங்கல் கட்டமைப்புக்களின் உதவியைநாட வேண்டும் என்றும் சட்டத்தரணிகள் சங்கம் வலி யுறுத்தியுள் ளது.

மிகமோச மடைந்து வரும் நாட்டின் பொரு ளாதார நிலை தொடர்பில் வெளியிட் டுள்ள அறிக்கையிலேயே இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை தாவது:

தீவிரமடைந்துவரக்கூடிய நிதி நெருக்கடி காரணமாகப் பொதுமக்கள் மத்தியில் சமத்துவமின்மை ஏற்படுவதுடன் அவர்கள் தமது உரிமைகளை அனுபவிப்பதிலும் சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலையேற்படும்.

அதுமாத்திரமன்றி சமூகத்திலுள்ள வறிய அல்லது இயலுமை மிகவும் குறைவான தரப்பினரே தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அங்கீகாரம்பெற்ற முக்கியமான அனைத்து தரப்படுத்தல் நிறுவனங்களாலும் இலங்கை தரமிறக்கப்பட்டுள்ளது. கடந்த 2019 ஆம் ஆண்டில் 85 சதவீதமாகக் கணிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான கடனளவு இப்போது 104 சதவீதமாக உயர் வடைந்துள்ளது. சவால்களை எதிர்கொள்வதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது என்பதையும் ஏற்றுக்கொள்கின்றோம்.

இருப்பினும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதில் தோல்விகண்டிருக்கின்றன என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நீதித்துறையின் சுயாதீனத்தன்மைக்கு 2013 இல் ஏற்பட்ட பாரிய நெருக்கடி!

## மனந்திறக்கிறார் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி

பாதுகாக்கப்பட்ட நீதித்துறையின் சுயாதீனத்தன்மைக்கு 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாரியதாக்குதல்ஏற்படுத்தப்பட்டது என முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதிஷிராணிபண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.



முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஜனாதிபதி பதவி காலத்தை உள்ளடக்கிய நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாட்டில் நான் மதிக்க கூடிய மிகவும் சொற்பளவிலான நபர்களில் முக்கியமானவராக முன் னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க சிறப்பிடம் பெறுகின்றார்.

1993 ஆம் ஆண்டு தொடக்கம் 2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உயர்நீதிமன்ற நீதியரசராக சுயாதீனமாகச் செயற்பட்டேன். ஜனாதிபதி பதவியில் இருந்துகொண்டு அவர் நீதித்துறைக்கு உயர்மட்ட நிலையை வழங்கினார்.

நீதிமன்ற சுயாதீனத்தைப் பாதுகாக்க அவர் வழங்கிய ஒத்துழைப்பு அதனூடாக உறுதிப்படுத்தப்பட்டது. பாதுகாக்கப்பட்ட நீதித்துறையின் சுயாதீனத்தன்மைக்கு 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில்பாரியதாக்குதல்ஏற்படுத்தப்பட்டது.

நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு பல்வேறு செயற்திட்டங்கள் அந்தக் காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டின் சட்டம், கல்வி, பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் அனைத்தும் காலப் போக்கில் மாற்றியமைக்கப்பட்டன என்றும் தெரிவித்துள்ளார்.

# புலனாய்வுப் பிரிவிலுள்ளவர்களை அனுப்பி கூட்டங்களை உளவு பார்க்க வேண்டாம்!

## சுனில் ஹந்துன்னெத்தி அரசுக்கு கோரிக்கை

எமது கட்சியின் கூட்டங்கள் பற்றி அறிந்து கொள்வதற்கு புலனாய்வுப் பிரிவினரை அனுப்பி வைக்க வேண்டாம் என ஜே.வி.பி.அரசாங்கத்திடம் கோரியுள்ளது. ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தமதுகட்சியால்நடத்தப்படும் கூட்டங்களைக் கண்காணிப்பதற்கு புலனாய்வுப்பிரிவினரை அனுப்பி வைக்கத் தேவையில்லை, எனக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தால் அனைத்து விவரங்களையும் வழங்குவேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டம் நடத்தப்பட்ட விஹாரைக்கு நான்கு தடவைகள் புலனாய்வுப் பிரிவினர் சென்று விசாரணை நடத்தியுள்ளனர், கூட்டங்களை ஏற்பாடு செய்யும் ஏற்பாட்டாளர்களின் வீடுகளுக்கும் சென்று விசாரணை நடத்தப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முள்ளிவாய்க்காலில் நிலத்திலிருந்து முக்கிய பொருள்கள் மீட்கப்பட்டன

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் கடந்த காலப்போரின் போது நிலத்தில் புதைக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் முக்கிய ஆவணங்கள் சில அடையாளம் காணப்பட்டுள்ளன.

பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்குஅமையபாதுகாப்புத் தரப்பினர் குறித்த பகுதியில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் சீருடை மற்றும் அடையாள அட்டை, வயர், பற்றரிகள் உள்ளிட்ட முக்கிய பொருள்கள் இனம் காணப்பட்டு அவை நிலத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் முல்லைத் தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் விடுதலைப்புலிகள் பயன்படுத்திய முக்கிய ஆவணங்களே இவ்வாறு நந்திக்கடல் களப்பு பகுதியில் நிலத்தில் புதையுண்ட நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

# எண்ணெய்த் தாங்கிகளின் கட்டுப்பாட்டை அரசு இழந்து வருகிறது என சு.க. சாடல்

நாட்டின் எண்ணெய்த் தாங்கிகளின் கட்டுப்பாட்டை அரசாங்கம் இழந்து வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ இதனைக் கூறினார்.

இந்தியாவுடன் இணைந்து எடுக்கப்படும் சில அரசாங்க தீர்மானங்கள் எதிர்காலத்தில் பாதகமாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இன்றைய நிலைவரப்படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் குறைந்த எண்ணிக்கையிலான தாங்கிகள் இருக்கின்றன எனத் தெரிவித்தார்.

அதே நேரத்தில் ஐஓசிக்கு மற்றொரு பிடி இருப்பதாகவும், மேலும் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் மற்றும் எல்ஐஓசிக்கு இடையில் ஒரு கூடுதல் நிறுவனம் உருவாக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

திட்டமிட்ட வகையில், வளர்ச்சியை அறிந்தோ அல்லது தெரியாமலோ, இலங்கை எண்ணெய் தாங்கிகளின் கட்டுப்பாட்டை இழந்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அமைச்சரவையிலும், நாடாளுமன்றத்திலும் ஆட்சேபனைகள் முன்வைக்கப்படும் அதே வேளையில், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் இணைந்து சுதந்திரக் கட்சியால் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விமர்சனங்களால் அதிருப்தியடைந்த அரசாங்கம், உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு கோருவதாக பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார்.

# கர்தினால் கேட்டமையால் பொலிஸ் அதிபர் 'கோட்'டைக் கழற்றிவிட்டு செல்லமாட்டார்!

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் காட்டம்

கொழும்பு பிரதேச தேவாலயத்தில் கைக்குண்டை வைத்தவர் தொடர்பில், கர்தினால் மல்கம் ரஞ்சித்தை விட, விசாரணையை முன்னெடுக்கும் அதிகாரிகளுக்கு, எவ்வாறு விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும் என்பது தெரிந்திருக்கும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரட்ன தெரிவித்துள்ளார்.

எனவே விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கற்பிப்பதற்கும்,விசாரணைகளுக்குத் தடையேற்படுத்தாமலும் இருப்பது உசிதமானது என்றும் அவர் குறிப்பிட்டார். கண்டியில செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டார். விசாரணைகளை நடத்தும்போது உடனடியாக அதில் முடிவைக் காணமுடியாது. எனவே, சம்பவம் தொடர்பில் 24 மணித்தியாலங்களுக்குள் முடி வைக் கோருவது யதார்த்தமாக இருக்காது என்று கமல் குணரட்ன குறிப்பிட்டார். இந்த சம்பவத்தின் பின்னர், பொலிஸ்மா அதிபரின் 'கோட்'டை கழற்றிவிட்டு செல்லுமாறு கூறுவதற்கு உரிமையில்லை. அந்த 'கோட்' டை கர்தினால் வழங்கவில்லை. எனினும் நாட்டில் உள்ள ஜனநாயகத்தின் அடிப்படையில் கர்தினால் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். இந்தநிலையில் இதனை ஏற்று பொலிஸ்மா அதிபரும் அதனை செய்யப்போவதில்லை என்று கமல் குணரத்ன தெரிவித்தார்.

# மின்சார சபைக்கு எரிபொருளை வழங்க பெற்றோலிய கூட்டுத்தாபனம் இணக்கம்!

இலங்கை மின்சார சபைக்கு ஆயிரத்து 500 மெட்ரிக் தொன் எரிபொருளை வழங்குவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளர் அன்ட்ரூ நவமணி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், எரிபொருள் இருப்பு இதுவரை கிடைக்கப்பெறவில்லைஎனவும்அவர்தெரிவித்துள்ளார்.

விரைவில் எரிபொருள் இருப்பு கிடைத்தால் மின்சார சபைக்கு தடையில்லாமல் மின்சாரம் வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்த் தலைவர்களை விலைக்கு வாங்கி தமது கூலிகளாக வைத்திருக்கிறது இந்தியா

## கஜேந்திரன் எம்.பி. சாடல்



இந்தியா தமிழ்த் தலைவர்களை விலைக்கு வாங்கி அவர்களைத் தங்களுடைய கூலிகளாக வைத்துக் கொண்டு தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் என்ற பெயரிலேயே இந்த ஒற்றையாட்சிக்குள் தமிழர்களிடத்தில் திணிப்பதற்குத் துணை போய்க் கொண்டிருக்கிறார்கள் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன் தெரிவித்தார்.

தமிழராய்ச்சி மாநாட்டிலே படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவு கூறும் நிகழ்வு தமிழாராய்ச்சி மாநாடு நினைவுத் தூபியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் அனுஷ்டிக்கப்பட்டது. பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக்காலத்தில் மாநாட்டில் கலந்து கொள்ள வந்த பொதுமக்களை பொலிஸார் தாக்கினர். சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டியவர்களே தவறு இழைத்தனர். அப்பாவி மக்கள் 11 பேர் படுகொலை செய்வதற்கு காரணமாக அமைந்தனர். குறித்த சம்பவம் இடம்பெற்று 47 வருடங்கள் கடந்த நிலையிலும் அது தொடர்பாகக் குற்றவாளிகள் இன்னும் தண்டிக்கப்படவில்லை.

அப்போதிருந்த மாநகர மேஜர் அல்பிரெட் துரையப்பா செய்த அந்த பெரும் துரோகம் ஆட்சிக் காலத்திலேயே தமிழர்கள் மிகப் பெரும் போராட்டத்தில் ஈடுபட கூடிய ஒரு நிலைமை தான் இன்றும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது. தமிழர்களைப் பொறுத்த வரையிலே தமிழர்கள் மீதான இந்த படுகொலைகளை மட்டுமல்ல வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு எதிராக ஆட்சியாளர்கள் ஸ்ரீலங்கா பொலிஸார், படையினர் மேற்கொண்ட படுகொலைகள் பாரியளவிலான போராட்டத்தில் ஈடுபட அதற்கான சூழலை உருவாக்கியது.

அந்த ஆயுத போராட்டம் பின்னர் சர்வதேச துணையோடு இருந்தாலும் அது மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் தமிழர்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்கவில்லை. ஒரு துரோகத்தனமான செயற்பாட்டிலேயே தமிழ்க் கட்சிகள் ஈடுபட்டிருக்கின்றமை என்பதுதான் மிகவும் துரதிஷ்டவசமானதாக இருக்கிறது.

இந்த செயற்பாடு மீண்டும் தமிழர்களை எங்கே கொண்டு செல்லப் போகின்றது என்பது தொடர்பாக ஓர் அச்சம் ஏற்படுகின்றது. தமிழர்களை நிராகரித்து தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சமஷ்டி தீர்வு வேண்டும் என்று வலியுறுத்தி எழுபத்தி நான்கு வருடங்களாகத் தமிழர்கள் போராடி வந்திருக்கின்றனர்.

இன்று தமிழ் மக்கள் மத்தியில் வாக்கு பெற்ற கட்சிகள் ஒற்றையாட்சியை அமுல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் எமது அரசியல் பயணத்தை ஆரம்பித்திருந்தோம். அன்று எங்களுடைய கருத்தை பொய் என்று சொன்னார்கள். 2015 ஆம் ஆண்டில் நாங்கள் சொன்ன கருத்துக்கள் ஓரளவுக்கு உண்மையாகத் தொடங்கியது.

நீதியரசராக இருந்த கைக்கூலியான விக்னேஸ்வரனைத் தமிழர்களில் ஒருவராகக் காட்டி, தமிழ் சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் கூட அவரை ஒரு நல்லவர் வல்லவர் என்று எங்களுடைய மக்களுக்கு காட்டி அவரை தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைக்க துணை நின்று இருந்தார்கள்.

புலம்பெயர் தேசங்களில் இருந்தும் அவருடைய துரோகத்தனம் தெரிந்து கொண்டும் அவருக்குத் துணை நின்றனர். விக்னேஸ்வரன் கூட இந்த 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற இந்தத் துரோகத்துக்கு துணை போயிருக்கின்றார். மக்கள் இதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். சம்பந்தன், செல்வம் அடைக்கலநாதன், சுமந்திரன், சித்தார்த்தன், மாவை சேனாதிராசா, விக்னேஸ்வரன் ஆகியவர்கள் கூட்டிணைந்து அரசமைப்பு ஆவணம் ஒன்றைத் தயார் செய்திருக்கிறார்கள். இது படிப்படியாக வளர்ச்சி அடைந்து நாடாளுமன்றத்திலும் அந்த அரசமைப்பை ஆதரிப்பார்களாக இருந்தால் இந்த தீவில் தமிழர்கள் நிரந்தர அடிமைகளாக்கப்படுவார்கள்.

இந்தியா தமிழ் தலைவர்களை விலைக்கு வாங்கி அவர்களைத் தங்களுடைய கூலிகளாக வைத்துக் கொண்டு தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் என்ற பெயரிலேயே இந்த ஒற்றை ஆட்சிக்குள் தமிழர்களிடத்தில் இந்த செயற்பாட்டுக்குத் துணை போய்க் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய மக்கள் விழிப்படைய வேண்டும் என்று இந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட இந்த மக்கள் மீது நாங்கள் ஆணையாக கேட்கின்றோம். – என்றார்.

# சுசில் வகித்து வந்த இராஜாங்க அமைச்சை தினேஷிடம் வழங்கினார் ஜனாதிபதி கோட்டா!

பதவி நீக்கம் செய்யப்பட்ட இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் கீழ் இருந்த விடயங்கள் மற்றும் நிறுவனங்கள் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் தேசிய கல்வி நிறுவனம் என்பனவே கல்வி அமைச்சரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

10 அமைச்சுக்களின் விடயதானங்களை திருத்தியமைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திங்கட்கிழமை வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலேயே இந்த விடயம் வெளிப்பட்டுள்ளது.

இதேவேளை சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வுக்கான இராஜாங்க அமைச்சின் நிறுவனங்கள் மற்றும் செயற்பாடுகள் நீதி அமைச்சிடம் ஒதுக்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலை முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வுக்கான இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்த இருந்தார்.

இருப்பினும் அரசியல் கைதிகளை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தினார் என வெளியான குற்றச்சாட்டை அடுத்து அவர் அப்பதவியை இராஜினாமா செய்திருந்தார்.



மேலும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்க அமைச்சின் கீழ் இருந்த மத்திய கலாசார நிதியம், புத்த சாசன அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

தொடர்ந்து இராஜாங்க அமைச்சின் கீழ் இருந்த உள்ளூராட்சி தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 அத்தியாயம்) மற்றும் மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம், 1988 இலக்கம் 2 ஆகியவை பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

# தேசிய ரீதியில் சம்பியன் மகுடம்வென்ற கிளிநொச்சி கபடி அணிக்கு வரவேற்பு!

கபடி தேசிய சம்மேளனத்தால் நடத்தப்பட்ட தேசிய ரீதியான கபடிப் போட்டியில் வரலாற்றில் முதல் தடைவையாக கிளிநொச்சி மாவட்ட அணி சம்பியனானது

கிளிநொச்சி மாவட்ட அணி சார்பாக உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தின் பெண்கள் அணியினர் பங்கு பற்றியிருந்தார்கள். அவர்களுக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) மகத்தான வரவேற்பு உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தினரால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட கபடி பயிற்றுவிப்பாளர் சிவநேசன், சிவநகர் அ.த.க பாடசாலையின் முன்னாள் முதல்வர் ஐ.இராசரத்தினம், பிரதேச சபையின் உறுப்பினர் ஜீவராசா மற்றும் வீராங்கனைகளின் பெற்றோர்கள் விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




# முக்கிய வெளிநாட்டு பிரதிநிதிகள் நால்வர் இலங்கைக்கு விஜயம்!

நான்கு முக்கிய வெளிநாட்டு பிரதிநிதிகள் இந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, ஹங்கேரியின் வெளிவிவகார அமைச்சர் அமைச்சர் பீட்டர் சிஜார்டோ , துருக்கியின் வெளிவிவகார அமைச்சர் மெவ்லூட் கவுசோக்லு , இங்கிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் காமன்வெல்த் மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தின் இராஜாங்க அமைச்சர் லார்ட் அஹ்மத் மற்றும் கொரியாவின் தேசிய சட்டமன்றத்தின் சபாநாயகர் பார்க் பியோங் ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

ஹங்கேரியின் வெளிவிவகார அமைச்சர் பீட்டர் சிஜார்டோ இன்று இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை லார்ட் அஹ்மட் ஜனவரி 18 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. கொரிய தேசிய சபையின் சபாநாயகர் ஜனவரி 19 ஆம் திகதி இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

துருக்கியின் வெளிவிவகார அமைச்சர் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. சீன அரச சபை உறுப்பினரும் வெளிவிவகார அமைச்சருமான வாங் யீ தற்போது இலங்கைக்கான விஜயத்தை முடித்திருந்தார்.

சர்வதேச சமூகத்துடன் இலங்கை தொடர்ந்தும் வலுவான இருதரப்பு உறவுகளைப் பேணி வருவதை இந்த விஜயங்கள் காட்டுகின்றன என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# மூன்று புதிய அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையகத்தில் பதிவு

2021 ஆம் ஆண்டுக்காக மூன்று புதிய அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணையகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அதன்படி, தமிழ் மக்கள் கூட்டணி, புதிய லங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் முற்போக்கு கூட்டணி என்பன பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணி கட்சி வடக்கின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் பதிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# லட்சக் கணக்கான இளைஞர், யுவதிகளுடன் அரசுக்கெதிராக களமிறங்கத் தயாராகும் சஜித்!

'புரட்சியின் ஆரம்பம்' என்ற தொனிப்பொருளில் சுமார் ஒரு லட்சம் இளைஞர்களை கொழும்புக்கு வரவழைத்து அரசாங்கத்துக்கு எதிராகக் குரலை எழுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்காக சமகி விஹிதும் ஜனபலவேகய என்ற புதிய இளைஞர் அமைப்பை சமகி ஜனபலவேகய கட்சி ஆரம்பித்துள்ளது.

இந்த அமைப்பிற்காக அனைத்து மாவட்டங்களிலும் 30 வயதுக்குக் குறைந்த இளைஞர்கள் 3 ஆயிரம் என்ற அளவில் இணைத்துக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அவர்களுக்கு விசேட பயிற்சி வழங்கும் முதலாம்கட்ட வேலைத்திட்டம் சனிக்கிழமை இரத்தினபுரியில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் நடைபெற்றது.

அனைத்து மாவட்டங்களிலுள்ள இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையை இரண்டு மாதங்களுக்குள் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த இளைஞர் அணியின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினராக ஹெஷா வித்தானகே செயற்படவுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.



## அதிவேக நெடுஞ்சாலைகள் ஊடாக கிடைத்த அதிகபட்ச வருமானங்கள்

கொழும்பு, ஜன. 17

அதிவேக வீதிகள் ஊடாக கடந்த 2021 ஆம் ஆண்டில் மாத்திரம் 880 கோடி ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

குறித்த ஆண்டில் அதிவேக வீதிகள் ஊடாகப் பயணித்துள்ள 3.86 கோடி வாகனங்கள் ஊடாக இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிவேக வீதிகள் ஊடாக ஒரு வருடத்தில் ஈட்டப்பட்ட அதிக பட்ச வருமானமாக இது கருதப்படுகிறது.

2021 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருமானத்தில் தெற்கு அதிவேக வீதி ஊடாக 450 கோடி ரூபாவும், கட்டுநாயக்க அதி வேக வீதி மற்றும் கொழும்பு சுற்று வட்ட அதிவேக வீதி ஊடாக 430 கோடி ரூபாவும் வருமானமாகக் கிடைத்துள்ளன.

இந்த வருமானம் கடந்த 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 21 வீத அதிகரிப்பு என வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## ஆசிரியர்களுக்கு அடிப்படை சம்பளம் தரத்துக்கு ஏற்பவே அதிகரிக்கப்படும்!

அதிபர், ஆசிரியர் ஆலோசகர் சேவை, ஆசிரியர் சேவைகளை மூடப்பட்ட சேவைகளாக பிரகடனப் படுத்தியமை தமது போராட்டத்தின் வெற்றி என ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த போராட்டத்துக்கு பங்களித்த அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட அனைத்துதரப்பினருக்கும் இலங்கை ஆசிரியர் சங்கம் தனது நன்றியை தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கையை நாசப்படுத்த பலர் முயற்சித்து தமது போராட்டத்தை நிறுத்தினர் என அச்சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையின் மூலம், அடிப்படை சம்பள உயர்வை வெற்றிகரமாக பெற்றுக் கொடுத்த ஆசிரியர்களுக்கு அவர் பாராட்டும் தெரிவித்தார்.

அதிபர் சேவை மற்றும் ஆசிரியர் ஆலோசகர்கள் சேவையில் உள்ளவர்களின் தரத்துக்கு ஏற்ப அடிப்படை சம்பளங்களும் அதிகரிக்கப்படும் என மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

## சுற்றுலாத்துறைக்கு பாதுகாப்பான நாடாக இலங்கை மாறுகின்றது

ஆசியக் கண்டத்தில் சுற்றுலாத்துறைக்குப் பாதுகாப்பான நாடாக இலங்கை இருப்பதாக உலக சுற்றுலா ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இது எமது நாட்டின் சுற்றுலாத்துறைக்குக் கிடைத்த அங்கீகாரம் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமை அதிகாரி கிமாலி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொவிட் நிலைமை காரணமாக மூடப்பட்டிருந்த நாடு முழுமையாக திறக்கப்பட்டதன் பின்பு மூன்று மாதங்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்த நிலை காணப்படுவதாகவும் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது கடந்த 11 நாள்களில் மொத்தமாக 31 ஆயிரம் 688 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 22 ஆயிரத்து 771 காணப்பட்டதோடு நவம்பர் மாதம் 44 ஆயிரத்து 294 எண்ணிக்கையினரும் டிசெம்பர் மாதம் அதன் எண்ணிக்கை 31 ஆயிரத்து 688 ஆக பதிவாகியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



## மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டம் திறந்து வைப்பு

மீரிகம முதல் குருணாகல் வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டம், பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

## பேராயர் மல்கம் ரஞ்சித்துக்கு பொலிஸ் மா அதிபர் பதவி!

ஞானசாரர் கூக்குரல்



நாட்டின் பொலிஸ் மா அதிபர் பதவியை, கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் வழங்க வேண்டுமென ஒரே நாடு - ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் பிரதானி கலகொடத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

பதுளையில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கூறுகையில் -

கர்தினாலின் சில செயற்பாடுகளை பார்க்கும் போது அவர் அதிகாரபூர்வமற்ற பொலிஸ்மா அதிபராக செயற்படுகிறார் என்றே தென்படுகிறது.

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு வைக்கப்பட்ட சம்பவம் ஒரு சாதாரண விடயம் அல்ல, இந்த நாட்டில் விசாரணை நடத்தப்படும் முறையொன்று உள்ளது.

கர்தினால் தனது சமூகத்தின் சார்பில் குரல் கொடுக்க வேண்டும் என்பதில் பிரச்சினையில்லை. கர்தினால் பொலிஸ் மா அதிபரை விமர்சனம் செய்திருந்தார்.

அவ்வாறானால் பொலிஸ் மா அதிபர் பதவியை ஜனாதிபதி கர்தினாலிடம் வழங்குவதே பொருத்தமானது என கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் உங்களையும் கைது செய்வோம்!

## ரயில்வே சேவையாளர்களுக்கு அரசு எச்சரிக்கை



கொழும்பு, ஜன 17

பொதுப் பயணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் ரயில் சேவையாளர்கள் இனி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டால் அவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் -

ரயில்வேத் தொழிற்சங்கத்தினர் இதுவரை காலமும் முன்வைத்த கோரிக்கைகளை நெருக்கடியான சூழ்நிலையில் இயலுமான அளவில் செயற்படுத்தியுள்ளோம்.

ரயில்வே சேவையில் ஈடுபட்டதன் பின்னர் இடைநடுவில் ரயில்வே பணிகளை நிறுத்தி விட்டு பொதுப் பயணிகளை அசௌகரியங்களுக்குள்ளாக்குவது முற்றிலும் தவறானதொரு செயற்பாடாகும்.

ரயில் சேவையில் மாதம் 2 லட்சத்துக்கும் அதிகமாக சம்பளம் பெறுபவர்களே பொதுப் பயணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

பொதுப் பயணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் தொழிற் சங்கத்தில் ஈடுபடும் ரயில்வே சேவையாளர்கள் உட்பட ஏனைய சேவை தொழிற்சங்கத்தினர் இனிவரும் காலங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள்.

ரயில் சேவையில் பல்வேறு சிக்கல் நிலை காணப்படுகிறது என்பதை ஏற்றுக் கொள்கிறோம், எனினும் சேவையில் நிலவும் பிரச்சினைகளுக்கு பேச்சு ஊடாகத் தீர்வு காண முடியும்.

பொதுப் பயணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் பொது போக்குவரத்து சேவையாளர்களுக்கு எதிராக இனிவரும் காலங்களில் கடுமையான நடவடிக்கையை முன்னெடுக்க நேரிடும். - என்றார்.

## 4 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைதாகியுள்ளார்

நெதர்லாந்தில் இருந்து அனுப்பப்பட்ட 4 ஆயிரம் போதை மாத்திரைகள் அடங்கிய பொதி ஒன்று சுங்க அதிகாரிகளால் மத்திய தபால் பரிமாற்றத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என சுங்கப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.01.2022இல் வெளியிடப்பெற்றது.

## இலங்கை மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையிலேயே இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையக மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு வரலாற்று முக்கியதுவம் மிக்கது. கடந்த 2017ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் நோர்வூட் மைதானத்துக்கு வந்தது வரலாற்று முக்கியதுவமிக்கது. அன்று பிரதமர் மோடிக்கு நீங்கள் கொடுத்த அன்பு, பாசம் என்பவை முக்கியமானவை. அதற்கு இந்தியா எப்போதும் நன்றியுடன் இருக்கும். தாய் தன் பிள்ளையை ஒருபோதும் மறப்பதில்லை அல்லவா? அதேபோன்றுதான் தாயான இந்தியா தனது பிள்ளைகளை ஒருபோதும் மறக்காது.

மலையக அபிவிருத்திக்காகத் தொடர்ந்தும் இந்தியா அதித சிரத்தையுடன் செயற்பட்டு வருகின்றது. முக்கியமாக நான்காவது கட்டத்தில் பத்தாயிரம் வீட்டுத்திட்டத்தை மலையகத்தில் ஆரம்பிக்கவுள்ளோம். மலையகத்தின் கல்வித்துறையிலும் இந்தியா அக்கறையுடன் செயற்படுகின்றது. மலையக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்தை இந்தியா வழங்குகின்றமை இதன் ஒரு பகுதியாகும். இதன் மூலம் சிறந்த நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். உறவின் உன்னதத்தைக் கூறும் தைப்பொங்கல் விழாவுக்கு என்னை அழைத்தமைக்கு நன்றி - என்றார்.

## நாட்டில் சட்டவிரோத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனங்களைத் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்க நிதி அமைச்சு முறையான வேலைத்திட்டத்தைத் தயாரித்து வருகின்றது.

சில அதிகாரிகள் தமது உத்தியோகபூர்வ வாகனங்களைத் தமது குடும்ப உறுப்பினர்களின் பாவனைக்காகவும், ஏனைய வாகனங்களை அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களின் கடமைகளுக்காகவும் பயன்படுத்துகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகள் தமது குழந்தைகளைப் பாடசாலைகளுக்கு ஏற்றிச் சென்ற பல வாகனங்கள் பாடசாலைகளுக்கு அருகில் நிறுத்தப்பட்டிருப்பதன் படங்களைப் புலனாய்வு அமைப்புகள் அரசுக்கு வழங்கியுள்ளன.

வாகன துஷ்பிரயோகம் காரணமாக வருடாந்தம் 200 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் விரயமாகி வருகின்றது எனவும் தெரியவந்துள்ளது.

## யாழ்.மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழங்க, பொய்க்கால் குதிரையாட்டம் மயிலாட்டம், கோலாட்டம் என்பனவற்றுடன் விருந்தினர்கள் யாழ். மாநகர சபை முன்றலில் இருந்து நிகழ்வு மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

இதன்போது யாழ். மாநகர சபையால் இயல் துறைக்கான அரசகேசரி விருது கவிஞர்.சோ.பத்மநாதனுக்கும், இசைத் துறைக்கான அரசகேசரி விருது 'இசைவாணர்' முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணனுக்கும், நாடகத்துறைக்கான அரசகேசரி விருது 'அண்ணாவியார்' வஸ்தியாம்பிள்ளை யேகக்ப் அல்பிரட்டுக்கும் வழங்கிவைக்கப்பட்டது.

ஐ.பி.சி. தமிழின் அனுசரணையில் காலை முதல் இரவு வரை இயற்துறை, இசைத்துறை, நாடகத்துறை என மூன்று அமர்வுகளாக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

கம்பவாரிதி இ.ஜெயராஜ் குழுவினரின் வழக்காடு மன்றம், புகழ்பெற்ற நாதஸ்வர கலைஞர்களான பாலமுருகன், குமரன் குழுவினரின் நாத சங்கமம், இசை ஆராதனை, சத்தியவான் சாவித்திரி இசை நாடகம், வீரபாண்டிய கட்டப்பொம்மன் நாடகம் என்பனவும் அரங்கேற்றப்பட்டன.

## இன, மத, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2022 ஆம் ஆண்டுக்கான தைப்பொங்கல் விழா, மலையக பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகளுடன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று நுவரெலியா சினிசிட்டா மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் நன்றியறிதலின் முக்கியதுவத்தை எடுத்துயம்பும் பொங்கல் நாளில் தொடர்ந்தும் உங்கள் மதவுரிமையைப் பாதுகாப்பேன் என உறுதியளிக்கின்றேன்.

அவரவர் அடையாளத்தைப் பாதுகாப்பதும், ஏனைய மதத்தினரை மதிப்பதும் உயரிய மனித குணமாகும். அவ்வாறான குணவியல்பை பாதுகாப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம். எனது தந்தை பெருந்தோட்ட மக்களுக்கும் பிரஜாவுரிமையை வழங்கி அவர்களின் வாழ்வுரிமையை பாதுகாத்தார்.

அவரே பிரஜாவுரிமை என்ற முதலாவது போராட்டத்தைத் தொடங்கி வெற்றி பெற்றார். அதேபோல் பெருந்தோட்ட மக்களை காணி உரிமையாளர்களாக மாற்றும் இரண்டாவது போராட்டத்திலும் பிரேமதாஸவின் மகன் வெற்றி பெற்று தருவார். சிலர் இன, மத, குல பேதங்களைப் பயன்படுத்தி என்னைச் சாடினர்.

அதைக் கண்டு நான் அச்சமடையப் போவதில்லை. எனது ஆட்சியில் இன, மத, குல மற்றும் அடிப்படைவாதம் போன்ற பேதங்கள் இன்றி அனைவருக்கும் பொதுவானதொரு ஆட்சி நடக்கும். இன்று சில மதவாதிகளுக்கும், இனவாதிகளுக்கும் மக்களின் துயரம் தெரிவதில்லை. ஆட்சியாளர்களுக்கும் இது தெரிவதில்லை.

காரணம் அவர்கள் கையில் காஸ் வெடிப்பதில்லை, அவர்கள் காஸ் வரிசையில் நிற்பதில்லை. அவர்கள் பசளையின்றி கஷ்டப்படவில்லை. அவர்கள் அரசி, சீனி, எண்ணெய் வரிசைகளில் எப்போதும் நிற்பதில்லை. அவர்களுக்கு ஒருபோதும் பால்மா பிரச்சினையில்லை அல்லவா?

காரணம் அவர்களுக்கு அவை எல்லாம் அரண்மனைக்குக் கொண்டு வந்து கொடுக்கப்படுகின்றது. தயவு செய்து விழித்துக் கொள்ளுங்கள். மதவாதம், பிரிவினைவாதத்தால் மீண்டும் ஏமாற வேண்டாம். ஆகவே, எமது தாய்நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் கைகோர்த்துச் செயற்படுவது அவசியம்

இயற்கை குளிர் காற்றை வழங்கினாலும் மக்களின் வயிற்றில் நெருப்பு எரிகின்றது. இன்று தரித்திரம் தலை தூக்கியுள்ளது. இன்று இந்தியா மலையக மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள் உள்ளிட்ட உதவிகளை வழங்குகின்றது. இதற்கு நீங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆகவே, பெருந்தோட்ட மக்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன். வேறு யாருக்கும் இது முடியாது - என்றார்.

## வல்லவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனோ கணேசன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மக்களை, குறிப்பாக மலையகத்தமிழர்களை பாரதத்தாய் ஒருபோதும் மறக்காது என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தமதுரையின்போது குறிப்பிட்டார். ஆகவே, எமது மக்களுக்கு தேவையானவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு இந்தியத் தாயுடன் பேசுவதற்கும், சண்டையிடுவதற்கும், தொல்லை கொடுப்பதற்கும் எமக்கு உரிமை இருக்கின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, நோர்வூட் வந்திருந்தபோது 10 ஆயிரம் வீடுகள் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார். அவருடன் பேச்சு நடத்தி நாமே அதனைப் பெற்றோம். தற்போது 4 ஆயிரம் வீட்டுத் திட்டம் நிறைவு பெற்றுள்ளது. 10 ஆயிரம் வீட்டுத் திட்டம் எமது ஆட்சியின் கீழ் நிச்சயம் ஆரம்பமாகும்.

இனி நல்லாட்சி அல்ல, விரைவில் வல்லாட்சி அதாவது வல்லவர்கள் ஆளக்கூடிய ஆட்சி உருவாகும். பொங்கலுக்கு முன்னர் போகிப் பண்டிகை கொண்டாடப்படும். பழையவை எரிக்கப்படும். நாமும் இந்த நாட்டிலுள்ள சில பழைய விடயங்களை எரிக்க வேண்டியுள்ளது.

இந்த நிகழ்வில் பங்கேற்ற எதிர்க்கட்சித் தலைவரும் எதிர்கால ஜனாதிபதியுமான சஜித் பிரேமதாஸ, மலையக மக்களுக்கு நில உரிமை வழங்கப்படும் என உறுதியளித்தார். வருங்கால ஜனாதிபதியிடம் அந்த உறுதிமொழியைப் பெற்றுள்ளோம் - என்றார்.

## கிளிநொச்சி, முல்லைத்தீவில்

# பிரதேச செயலாளர்கள் மூவருக்கு இடமாற்றம்!

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பணியாற்றிவந்த பிரதேச செயலர்கள் மூவருக்கு இடமாற்றம் தொடர்பான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதற்கு அமைவாக, கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலாளராகக் கடமையாற்றி வந்த எஸ்.கிருஸ்ணேந்திரன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராகவும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த பரமோதயன் ஜெயராணி முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராகவும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக கடமையாற்றி வந்த ரி.அகிலன் பூநகரி பிரதேச செலாளராகவும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த இடமாற்றம் கடந்த வருடம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நடைமுறையாகாத நிலையில் தற்போது மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பிரதேச செயலாளர்கள் புதிய பிரதேச செயலகங்களில் எதிர்வரும் புதன்கிழமை கடமைப் பொறுப்புக்களை ஏற்கவுள்ளனர்.

## பேக்கரி தொழில் முடங்கும் நிலை

எரிவாயு பற்றாக்குறை மற்றும் தரமான கோதுமை மா இல்லாததால் பேக்கரி தொழில் முடங்கும் நிலை உருவாகவுள்ளது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக நாட்டில் உள்ள 7 ஆயிரம் பேக்கரிகளில் சுமார் 3 ஆயிரத்து 500 பேக்கரிகள் செயலிழந்துள்ளன எனவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில், அமெரிக்கா மற்றும் கனடாவுக்குப் பதிலாக சீனா, ரஷ்யா, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து உயர்தர கோதுமை தானியங்கள் மற்றும் மா இறக்குமதியானது பேக்கரி உணவு உற்பத்தியில் கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக தரமான கோதுமை மா இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## விளம்பரத் தொடர்புகளுக்கு -

மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622